www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய பூமி

புதிய பூமி

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

PUTHIYA POOMI

சுற்று 09 | நவம்பர் 2002 | பக்கம் 08 | விலை 10/- | சுழற்றி 51

# ஜனாதிபதியின் சமாதானமா? பிரதமரின் சமாதானமா?



நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான தனது நிகழ்ச்சி திட்டத்தை ஏற்றுக்கொள்ளும்படி ஐ.தே.மு. அரசாங்கத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க அழைப்பு விடுத்துள்ளார். அதன்மூலம் ஐ.தே.மு. அரசாங்கத்தின் சமாதான திட்ட நிகழ்ச்சி நிரலை உட்கிடையாக அவர் நிராகரித்துள்ளார். அக்டோபர் 24ம் திகதி தேசிய தொலைக்காட்சியினூடே நாட்டு மக்களுக்கு உரையாற்றும்போதே மேற்படி தெரிவித்தார்.

அவ்வழைப்பை ஐ.தே.மு. அரசாங்க அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நிராகரித்துள்ளார். ஜனாதிபதியுடன் சேர்ந்து பணியாற்ற முடியுமெனினும் ஐ.தே.மு. அரசாங்க நிகழ்ச்சி நிரல்களை மாற்ற முடியாது என்று கூறியிருப்பது தெரிந்ததே.

யுத்த நிறுத்தம் ஏற்பட்டு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளென சில விஷயங்கள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கை அரசாங்கத் திற்கும் விடுதலை புலிகளுக்குமிடையே தாய்லாந்தில் பேச்சுக்கள் நடந்துள்ளன.

இந்நிலையில் யுத்தம் இல்லை என்பதன் அர்த்தம் சமாதானம் சாத்தியமாகி விட்டது என்பதல்ல என்றும் சகல இனங்களுக்கும் ஏற்புடையதான சமாதான தீர்வு திட்டமொன்றை தீட்டுவதற்கு வேறுபாடுகளை மறந்து தன்னுடன் இணையுமாறும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

சமாதானத்தீர்வு என்பது தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பதனை ஜனாதிபதி மறந்து பேசுவதாகத் தெரிகிறது. அத்தீர்ப்பு அடக்கப்படும். தேசிய இனங்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வாகவே இருக்க வேண்டும். நாட்டுப்பிரிவினை இல்லாத தீர்வாக இருக்கும்போது எந்தவொரு மக்கள் பிரிவினரும் பயப்படத் தேவை இல்லை. தற்போது நிலவும் யுத்தமற்ற சூழ்நிலை மக்களுக்கு நிம்மதியை கொடுத்திருக்கிறது என்பது உண்மை. யுத்த நிறுத்தம் என்பது மட்டும் தீர்வில்லாவிட்டாலும் அது சமாதானத்திற்கான அடிப்படை ஆகும்.

கிடைத்த சந்தர்ப்பத்தைக் கொண்டு தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாமல் ஏழு வருடங்களாக இழுத்தடித்துவிட்டு. யுத்தத்தின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தப் போவதாக. வடக்கில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி விட்டு தற்போது சமாதானத்தினை



ஏற்படுத்த தன்னிடம் நிகழ்ச்சி நிரல் இருப்பதாக கூறுவது எவ்வகையில் பொருத்தமானதாகும்?

தொடர்ச்சி.. 8ம் பக்கம்

# பேச்சுவார்த்தையைக் குழப்பிக் குலைக்க கிழக்கை மையப்படுத்தும் பேரினவாதிகள்!

## திரைமறைவில் அயலகத்துக் கரங்கள்!!



தாய்லாந்து பேச்சுவார்த்தை இரண்டாவது கட்டத்தினுள் புகுந்து நிற்கிறது. அதனைத் தொடர்வதில் இது வரை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் உறுதியாக இருந்து வருகின்றனர். ஆனால் தெற்கின் பேரினவாத வெறியர்களும் அவர்களுக்கு திரை மறைவில் ஆதரவு வழங்கும் அயலகத்துப் பெரு நாடு ஒன்றும் பேச்சு வார்த்தை யைக் குழப்பி குலைத்துக் கொள்வதில் மும்மரம் காட்டி நிற்கின்றனர். இதற்கு வாய்ப்பான இடமாகத் தேர்ந்தெடுத்துள்ள பிரதேசம் கிழக்கு மாகாணமாகும். இதனை அண்மைய தொடர் சம்பவங்களும் துயர நிகழ்வுகளும் தெளிவாக அடையாளம் காட்டி நிற்கின்றன.

மட்டக்களப்பு அம்பாறை திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியுள்ள கிழக்கு மாகாணத்தில் மூவின மக்களும் வாழ்ந்து வருகின்றனர். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும். தமிழ் முஸ்லீம் மக்கள் மத்தியில் வளர்க்கப்பட்ட குறுந் தேசியவாத நிலைப்பட்ட உணர்வுகளும் தொடர்ச்சியான மூவின முரண்பாடுகளின் அடிப்படையாகும். இவற்றைப் பயன்படுத்தியே கிழக்கில் பாராளுமன்ற அரசியல் பகடைக்காய்கள் நகர்த்தப்பட்டு அதன் ஊடாகத் தத்தமது நலன்களைத் தக்கவைத்து வந்த வரலாறு நீடிக்கின்றது.

இப்பொழுது நீண்ட யுத்தத்திற்கும் அதன் கோர அழிவுகளுக்கும் பின்பு தோன்றியுள்ள சமாதான சூழலையும் பேச்சுவார்த்தை தொடர்வதையும் சகிக்க முடியாத பேரினவாத யுத்தவெறி கொண்ட சக்திகள் கிழக்கு மாகாணத்தைப் பயன்படுத்தி பேச்சுவார்த்தையைக் குழப்பி குலைத்துக் கொள்ள முனைந்து செயல்படுகின்றன.

பிரதானமாக தமிழ் முஸ்லீம் மோதலைத் தீவிரப்படுத்தி வருவதுடன் அதற்குப் பலம் சேர்க்கும் வகையில் சிங்கள, தமிழ் மோதலையும் உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளனர். ஜே.வி.பி. சிஹல உறுமய மற்றும் பேரினவாத அரசியல் மதவாத சக்திகள் தெற்கில் அலை எழுப்பிவரும் அதேவேளை தமது கைங்கரியங்களைகிழக்கில் மோதல்கள் ஆக்குவதில் ஈடுபட்டும் வருகின்றன. அண்மைய திருக்கோவில் காஞ்சிரங்குடாச் சம்பவத்திலும் அதனைத் தொடர்ந்த திருகோணமலைச் சம்பவத்திலும் மேற்படி சக்திகளின் பின்னணி இருந்து வருவதாகவே கூறப்படுகின்றது.

அவ்வாறே பொதுசன முன்னணியில் உள்ள கடும்போக்குப் பேரினவாதிகள் கிழக்கில் முஸ்லீம் தமிழ் மோதல் உருவாக வேண்டும் என்பதில் உறுதியாக செயலாற்றி வருகிறார்கள். முன்பு யூஎன்.பியில் இருந்து பின் பொதுசன முன்னணிக்குள் புகுந்து கொண்ட கலாநிதி அமுனுகம பேரினவாதத்தைக் கிளப்புவதில் முதன்மையாளராக இருந்து வருகிறார். தெற்கில் ஜே.வி.பி யுடன் கட்டிப் புரள்கிறார். அதேவேளை கிழக்கில் முஸ்லீம்களுக்கு தனியலகு வேண்டும் என்கிறார். அவரது தனிலகுக் கோரிக்கை முஸ்லீம்களுக்கு கிடைப்பதற்கான ஒரு நேர்மையான குரல் அல்ல. அது குழப்பத்திற்கான தமிழ்-முஸ்லீம் மோதலை உருவாக்குவதற்கான நயவஞ்சகப் பேச்சேயாகும்.

மேற்கூறியவர்கள் பேரினவாத நிலையில் நிற்கும் அதேவேளை கிழக்கின் முஸ்லீம் பாராளுமன்றத் தலைமைகள் தத்தமது சுயநல வேட்டைக்காக முஸ்லீம் மக்களை உசுப்பி விடுவதில் வேகமாக இருந்து வருகிறார்கள்.



முஸ்லீம் காங்கிரசுக்குள் தலைமைப் போட்டிக்கு நிற்பவர்கள். ஏற்கனவே அதிலிருந்து பிரிந்து நிற்பவர்கள், இவ் இரு தரப்பினருக்கும் எதிராக நிற்பவர்கள் என மூன்று தரப்பினர் முஸ்லீம்கள் மத்தியில் அரசியல் செய்து வருகிறார்கள். இவர்கள் அனைவரினதும் இலக்கு பாராளுமன்ற ஆசனங்களாகும். அதற்கு உரிய அடிப்படையாக தமிழ்-முஸ்லீம் மோதல் தகுந்த காலமாகும். மோதல் வருவதும் உயிர்கள் போவதும் உடமைகள் எரிவதும் தத்தமது வாக்குவங்கிகளை நிரப்பும் என்பதே அவர்களது நம்பிக்கை. அவர்களுக்கு சாதாரண முஸ்லீம் மக்கள் பற்றிய அக்கறை என்பதெல்லாம் சுயநல சொத்து சுக தேடல்களுக்கு அப்பாற்பட்டதே யாகும். தென் கிழக்கு தனியலகை முன் வைத்து பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு என்ப தன் பின்னால் இருந்தவை பல விடயங்களாகும். அதன் உள் நோக்கம் முஸ்லீம் மக்களை உசுப்பி விட்டு பேச்சுவார்த்தையைக் குழப்பிக் கொள்வதேயாகும். இவர்களுக்கும் அயலகத்துக் கரங்களுக்கும் தொடர்பும் பரிமாறல்களும் இருந்ததாகக் கூடப் பேசப்படுகின்றது.

முஸ்லீம் தலைமைகள் தமிழ் விரோதம் பரப்புவதற்கு இரண்டு அம்சங்கள் கவனிக்கப்படல் வேண்டும். ஒன்று அவர்களது முஸ்லீம் மதத் தேசியவாத நிலைப்பாடு. இரண்டு, அதனை நியாயப்படுத்துவதற்கு ஏற்கனவே முஸ்லீம் மக்கள் மீது தமிழ் பழமைவாத ஆதிக்க அரசியல் போக்கின் நீடிப்பாகும். இந்த தமிழ் ஆதிக்கப் போக்கின் அபாயம் குறித்து ஏற்கனவே நாம் சுட்டிக் காட்டி வந்துள்ளோம். தேசியவாதம் சார்ந்த ஆதிக்க அகங்காரப் போக்குகளை தமிழர்களோ முஸ்லீம்களோ கைவிடாதவரை ஒரே சொந்த பூமியில் ஒரே மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட இவ்விரு தேசிய இனங்களுக்கும் விடிவும் இல்லை விடுதலையும் கிட்டாது. இது உணரப்படும் போது மட்டுமே எதிர்காலத்திற்கான வெளிச்சம் தோன்ற முடியும்.

கிழக்கில் பேரினவாத சக்திகள் தமிழ் முஸ்லீம் சிங்கள மக்களுக்கிடையிலான மோதலை உக்கிரப்படுத்த ஆயுதப்படைகள் உதவுவதற்கு தயாராக இருந்து வருவதை அண்மைய சம்பவங்கள் தெளிவுபடுத்தியுள்ளன. திருக்கோவில் காஞ்சிரங்குடாவில் ஏழு சாதாரணத் தமிழ் மக்களின் உயிர்கள் குடிக்கப்பட்டன. அங்கு புலிகள் இயக்கமே மக்களை ஏவி விட்டதாகக் குற்றம் சுமத்துவோர் திருகோணமலையில் ஹர்த்தாலில் ஈடுபட்ட தமிழர்கள் மீது பொலீஸ், ஊர்காவல்படை, இனவாத வெறிக்கும்பல் இணைந்து நடாத்திய தாக்குதலுக்கு என்ன நியாயம் கூறப் போகிறார்கள். ஏற்கனவே வாளைச்சேனை மோதலின்போது எட்டு முஸ்லீம் தமிழ் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. கடைகள் வீடுகள் எரியூட்டப்பட்டன. நூற்றுக்கு மேற் பட்டோர் மேற்கூறப்பட்ட சம்பவங்களில் படுகாயங்கள் அடைந்தனர்.

இவ்வாறு ஆயுதப் படைகள் கண்மூடித்தனமாக நடந்து கொள்வதற்கு அவர்களிடம் உறைந்து காணப்படும் பேரினவாத யுத்தவெறி அடிப்படையானதாகும். அதேவேளை ஆயுதப்படைகள் இன்று இரட்டை அதிகாரத்தின் கீழ் இருந்து வருகின்றமை மற்றொரு காரணமாகும். எனவே பேச்சுவார்த்தையைக் குழப்ப நிற்கும் பேரினவாதிகள் ஆயுதப்படைகளை மறைமுகமாக ஏவிக்கொள்ள சந்தர்ப்பங்கள் இருந்து வருவதை அண்மைக் காலங்களில் காண முடிந்துள்ளது.

கிழக்கை மையப்படுத்தி பேச்சுவார்த்தையைக் குழப்பிக் குலைத்துக் கொள்ள தமிழ் முஸ்லீம் சிங்கள மக்கள் பேரினவாதிகளுக்கு இடமளித்து தமக்குள் மோதல்களை மீண்டும் மீண்டும் உருவாக்குவார்களேயானால் அதனால் நன்மை அடைவோர் ஆளும் வர்க்கங்களின் பேரினவாதிகளும், அயல் ஆதிக்கத்தை எங்கள் அனைவர் மீதும் திணிக்க நிற்கும் சக்திகளுமேயாவர் என்பது ஆழமாகவும் தூரநோக்கோடும் உணரப்படல் வேண்டும்.

# ஆறுமுகன் என்ன செய்யப்போகிறார்?



ஐ.தே.கட்சி அரசாங்கத்தின் அமைச்சரும் இ.தொ.கா. தலைவருமான ஆறுமுகன் தொண்டமானுக்கு நெருக்கடி [illegible]டிவிட்டது. ம.ம.மு. தலைவர் [illegible]திரசேகரம், ஐ.தே.மு அரசாங்கத்தில் தனது செல்வாக்கை உயர்த்திக் கொள்வதற்காக காட்டிக்கொடுப்புகளில் ஈடுபட்டு வருகிறார். குறிப்பாக மேல்கொத்மலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அவர் ஐ.தே.மு அரசாங்கத்திற்கு பூரண ஆதரவை கொடுத்துவருகிறார். அதனால் அத்திட்டத்தை எதிர்க்கும் நிலைப்பாட்டை எடுத்து மலையகத் தமிழ் மக்கள் மத்தியில் அவரது ஆதரவை நிலைநிறுத்திக்கொள்ள ஆறுமுகன் தொண்டமான் முயற்சிக்கிறார்.

இதனால் அவரை அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யும்படி காலஞ்சென்ற காமினி திசாநாயக்கவின் மகனும், அமைச்சர் கருஜயசூரியவின் மருமகனுமான ஐ.தே.மு.யின் ஒரு பிரதியமைச்சருமான நவீன் திசாநாயக்க கேட்டுள்ளார். அத்துடன் இன்னுமொரு மலையகத் தமிழ் எம்.பி.யான சதாசிவம் ஐ.தே. கட்சியுடன் நெருக்கமாகி வருகிறார். இவையெல்லாம் ஐ.தே.கட்சியின் தலைமையிடம் அமைச்சர் ஆறுமுகத்திற்கு செல்வாக்கை குறைப்பனவாகவே அமைந்துள்ளன.

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் நெருக்கடியின் விளைவாக பொதுத் தேர்தல் ஒன்று நடந்தால் எந்தக் கட்சியுடன் கூட்டுச்சேர்வது என்பது பற்றியும் ஆறுமுகத்திற்கு பிரச்சினையாகவே இருக்கிறது.

இவை யாவும் அவருடைய பிரச்சினைகளேயன்றி மலையகத்தமிழ் மக்களுடைய பிரச்சினைகளல்ல. அவருக்கு நெருக்கடிகள் அதிகரிக்க அவர் மக்களுடைய கோரிக்கைகளை கையில் எடுக்கிறார். அவர் மேல்கொத்மலைத் திட்டத்திற்கு காட்டி வரும் எதிர்ப்பு அவருக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளை அடிப்பண்டயாகக் கொண்டதே. ஆனால் அதனை எதிர்க்குமளவிற்கு வரவேற்கத்தக்கதே.

தொடர்ச்சி 8ம் பக்கம்ள

புதிய பூமி அடுத்த இதழ்

அதிக பக்கங்களுடன் டிசம்பர் 1ம் திகதி வெளிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

www.padippakam.com



# இப்படியும் அதிகாரப் பகிர்வு!

"பல்கலைக் கழக 'பகிடிவதை' நிகழ்வுகளில் தமிழ் மாணவர்களை வதைக்கும் உரிமை சிரேஷ்ட தமிழ் மாணவர்களுக்கும் சிங்கள மாணவர்களை வதைக்கும் உரிமை சிங்கள சிரேஷ்ட மாணவர்களுக்கும் உள்ளதுபோல, அரசியலில் தமிழர்களை ஏய்க்கும் உரிமை தமிழ் அரசியல்வாதிகளுக்கும், முஸ்லீம்களை ஏய்க்கும் உரிமை முஸ்லீம் அரசியல்வாதிகட்கும். மலையகத் தமிழரை ஏய்க்கும் உரிமை மலையகத் தமிழ் அரசியல்வாதிகட்குமே என்னுமளவிற்கு ஒரு அதிகாரப் பகிர்வு நீண்டகாலமாக இருந்து வருகின்றது.

இதன் விளைவாகத் தேசிய இனப் பிரச்சினையை ஒரு குறிப்பிட்ட தேசிய இனக் கண்ணோட்டத்தில் மட்டுமே பார்க்கும் ஒரு போக்கு உறுதி பெற்றுள்ளது. இதன் விளைவாக ஒரு தேசிய இனத்தின் ஏகப் பிரதிநிதிகளாகத் தம்மைக் காட்டுகிற தேவை சிறுபான்மை தேசிய இனத்தினது அரசியல் தலைமைகளிடையே அதிகமாகி உள்ளதை நாம் காணலாம்.

கோகர்ணன்
தினக்குரல்
20-10-2002

## இது விடுதலையா?

பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ள 222 கைதிகளை யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப் போகிறார்களாம். எங்கே? அவர்களின் வீட்டிற்கல்ல - யாழ் சிறைச் சாலைக்கு மாற்றப்பட இருக்கிறார்களாம்.

இதைத் தமிழ்ப் பாராளுமன்ற கூத்தணியினர் "நல்லதும் நியாயமானதும்" எனப் பாராட்டு வேறு தெரிவித்துள்ளனர். கஜேந்திரகுமாரின் சட்ட வாதப்படி கைது செய்யப்பட்டவர்கள் கைது செய்யப்பட்ட இடங்களில் விசாரிக்கப்பட வேண்டும்.

வருடக் கணக்காகச் சந்தேகத்தின் பேரில் - கவனிக்கப்பட வேண்டியது - விசாரணையன்றி இருப்பவர்களை விடுதலை செய்ய முடியாத தமிழ்த் தலைமை சிறை மாற்றத்துடன் திருப்தியடைகிறார்கள்.

சட்டத்தரணிகள் மலிந்த தமிழ்த் தலைமை தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை மனித உரிமை மீறல் என்ற அடிப்படையில் விடுதலை செய்யக் கோரி வழக்குகள் தாக்கல் செய்யாமல் கும்பலில் கோவிந்தா போடுவது ஏன்?

## வலி வடக்கு மீளக் குடியமர்வு எங்கே?

## கூட்டமைப்பு வீரர்கள் நித்திரையில்!

வலி வடக்கு பறிபோவதை எதிர்த்து குரல் கொடுத்து மறியல் ஆர்ப்பாட்டம் செய்து நில அபகரிப்பைத் தடுப்பதில் இடதுசாரிக் கட்சிகள் கொழும்பில் முன்னின்றன. குறிப்பாகப் புதிய ஜனநாயகக் கட்சி முன்னிலைப் பாத்திரம் வகித்தது.ஆனால் கடந்த தேர்தல் காலத்தில் அவற்றை எல்லாம் மறைத்துக் கொண்ட கூட்டமைப்புக் கட்சிகள் தமக்கு வாக்களித்தால் வெட்டிப் பிடுங்கிக் கொண்டு வலி வடக்கு மக்களை மீளக் குடியமர்த்துவோம் என்று வாக்குறுதி வழங்கினர். மேல்தட்டு வர்க்கம் வாக்குறுதி வழங்கினால் அதில் மயங்குவது சாதாரண மக்களது வழமை. அதுவும் ஆண்ட பரம்பரையினர் கூறினால் அடிமைத்தனமாகக் குழைந்து நிற்பதும் சில சேவகம் செய்பவர்களது முறைமை. ஆனால் கூட்டமைப்பினர் பாராளுமன்றம் சென்று எதனைக் கிழித்தார்கள். விநாயகமூர்த்தி ஏதோ செய்யப் போவதாகக் கூறினார். ஆள் அரவத்தை வடபுலத்தில் காணவில்லை. அவருக்கு கொழும்பில் நிறைய வழக்குகள் இருப்பதால் அடிக்கடி வர முடியவில்லை யாம். புத்தம் புதிய கார் வரிச்சலுகையில் கிடைத்திருப்பதால் அதில் சென்று வழக்குரைப்பதில் வேகமாக உள்ளார். மாவையார் இடையிடையே பத்திரிகை அறிக்கை. பிரதமருக்குக் கடிதம். இலவசமாகக் கிடைக்கும் எழுத்துதாள்களுக்கும் வேலை வேண்டும்தானே. ஆனந்தசங்கரியாரோ அவர்தம் யூ என்.பி சகாக்களோடு ஒரே கும்மாளம். ஆனந்தங்களை அனுபவிக்காது விட்டால் இனி அதற்குரிய காலம் வரமாட்டாது தானே. ஆனால் வாக்களித்து நம்பிக்கையோடு எதிர்பார்த்த வலி வடக்கு மக்களது வாய்களில் மண்தான் மீண்டும் மீண்டும் வீழ்கிறது. மீளக் குடியமர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை என ஆட்சியும் ராணுவமும் கூறிவிட்டனர். அதன்பின் கூட்டமைப்பால் என்ன செய்ய முடியும். வலி வடக்கிற்கு ஜே.பி. பட்டம் கொடுப்பதில் கூட்டணியினர் மும்முரம். பரம்பரை ஏமாற்றுத் தொடர்கிறது. மக்கள் நிலைகள் பரிதாபம்.

## உரமானியம் குறைப்பு

ஒக்டோபர் 10ம் திகதியிலிருந்து யூறியா உரத்திற்கான மானியம் ரூ.10.647/-ல் இருந்து ரூ.6,000/-ஆகக் குறைக்கப் பட்டுள்ளது. இந்தக் குறைப்பை தேசிய உழவர்கள் முன்னணி கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

நெல்லின் கொள்வனவு விலையை டொலரின் விகிதத்திற்கேற்ப மேற்கொள்வது பற்றி நடவடிக்கை மேற் கொள்ளப் படுமெனத் தற்போது ஆட்சியிலிருப்போர் தேர்தலின் போது வாக்குறுதி அளித்திருந்தனர். அப்படிச் செய்வதாயின் அரசு நெல்லை கிலோ ஒன்றுக்கு ரூ.17/- அல்லது ரூ.18/- க்கு கொள்வனவு செய்ய வேண்டும். ஆனால் அது மாதிரி யூஎன்.பி. அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லையென்பது தெட்டத் தெளிவானது.

உலக வங்கியின் ஆணைப்படி நமது நாட்டில் நெல் உற்பத்தியும். தெங்கு உற்பத்தியும் படிப்படியாகக் குறைக்கப்பட வேண்டும். அப்படிக் குறைத்தால் நமது நாட்டின் உணவு முறையில் மாற்றம் ஏற்படுத்தலாம். பின்னர் பல் தேசியக் கம்பெனிகளின் உணவு வகைகளை இந்த நாட்டில் புகுத்துவதன் மூலம் சகல உணவுத் தேவைக்கும் அந்நிய நாடுகளை எதிர்பார்க்கும் நிலைக்குத் தள்ளப்படும்.

## உதவி மருத்துவ அதிகாரியின் வேலை நிறுத்தம்

இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை உதவி மருத்துவ அதிகாரிகளின் வேலை நிறுத்தத்தை தீர்ப்பது தொடர்பாக அரசு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த வேலை நிறுத்தம் காரணமாக 600க்கு மேற்பட்ட கிராமப்புற வைத்தியசாலைகள் செயல் இழந்துள்ளன.

இதேசமயம் நகர்ப்புற வைத்தியசாலைகளில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் அரசாங்கம் மிக விரைவாகத் தலையிட்டு ஏதோ ஒரு வகையில் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும். யூஎன்.பி. அரசின் வாக்கு வங்கி நகரப் புறங்களிலிருப்பதுவே இதற்கான காரணமாகும்.

கிராமப் புறங்களில் இடம்பெறும் எந்தப் பிரச்சினையாய் இருந்தாலும் யூஎன்.பி. மிகவும் தாமதித்தே செயற்படுவதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## வலப்பனை பிரதேச சபை கவனமெடுக்குமா?

இராகலை நகரில் உள்ள பொது மலசலகூடம் பாவனைக்குதவாத வகையில் சிதைவுற்றுக் கிடக்கிறது. நீர் வசதியற்று துர்நாற்றம் வீசும் போதும் பல வருடங்களாக திருத்தப்படாமல் உள்ளது. நிரம்பி வழியும் கழிவுநீர் கருணா கங்கைக்கு திருப்பி விடப்பட்டுள்ளது. இதற்கு அருகிலேயே பாராளுமன்ற உறுப்பினர் சீ.பி. ரத்நாயக்காவின் வீடு உள்ளது. பிரதேசசபை தலைவரின் வீடும் நகரத்திற்குள்ளேயே உள்ளது. பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரும் இங்கு வந்து போகின்றனர் என்றாலும இதனைக் கண்டும் காணாமல் இருக்கின்றனர். மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட இவர்கள் பொது மக்களின் நலனில் கூடிய அக்கறை செலுத்த வேண்டியவர்களாகின்றனர்.

பொது சுகாதாரம் பாதிக்கப்படும்போது மஞ்சட் காமாலை. மலேரியா. டெங்கு போன்ற கொடிய நோய்கள் பரவும் ஆபத்து ஏற்படும். கருணா கங்கை ஆற்றில் ஓடும் நீரினை மக்கள் உபயோகிக்கின்றனர். இதனால் மக்கள் தொற்று நோய்க்குள்ளாகும் ஆபத்துள்ளது. பிரதேச சபை இனியாவது கவனிக்குமா?

**புதிய ஜனநாயக கட்சியின்**
**நான்காவது தேசிய மாநாடு**
**நவம்பர் 8ம், 9ம்**
**திகதிகளில் நடைபெறும்.**
**ஆதரவு தாரீர்! நிதி வழங்குங்கள்.**

## தனியார் மயமாகும் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

யூஎன்.பியின் 17 வருடகால ஆட்சியில் 42 நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப் பட்டன. ஆனால் பொதுசன முன்னணியினரின் 7 வருட ஆட்சியில் மேலும் 42 நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப் பட்டன.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனம் பெரிய இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒன்பது காப்புறுதி நிறுவனங்கள் தனியாரினால் நடாத்தப் பட்டு வருகிறது. அப்படி இருக்கையில் இலாபத்தில் இயங்கும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்த வேண்டிய தேவை என்ன?

• • • • •

# நாலும் நடக்கும் நற்குணம் உலகிலே

### துப்பறியும் தூதரகம்

அண்மையில் ஒரு தமிழ்ச் செய்தி ஏட்டில் அமைதிப் பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதில் "இந்து" பத்திரிகையின் கடும் முயற்சியும் அதன் பங்காளிகளுள் ஒருவரான "புறொண்டலைன்" ராமின் அமிர்தலிங்கம் நினைவுப் பேருரையின் திமிர்த்தனமும் பற்றிக் கடுமையாகக் கண்டித்து எழுதப்பட்டிருந்தது. அக் கட்டுரை ஒரு புனைபேரில் வந்தது. அதை எழுதியவர் யார் என்று இந்தியத் தூதரகம் பலர் மூலமும் விசாரித்து வருகிறதாம். இது ஏன்?

இந்து பத்திரிகையின் விஷமத்தைக் கண்டித்தால் இந்தியத் தூதரகத்திற்கு ஏன் வலிக்கிறது?

இது போலவே அமெரிக்க தூதர் ஆஷ்லி வில்சைக் கண்டித்து ஒருவர் தூதரகத்துக்கு எழுதிய கடிதத்தை அடுத்து. அதை எழுதியவரது முகவரியை அறிய பொலிசார் மூலம் முயற்சி எடுக்கப்பட்டதாக அறியக் கிடைத்தது.

உண்மைகளைச் சொன்னால் இவர்களுக்கு உடம்பெல்லாம் அரிக்கிறது. கட்டுரைகளில், கடிதங்களில் உள்ளவை பொய்யென்றால் அவற்றை மறுத்துப் பதில் எழுதலாமே! அதை விட நல்ல விடயம் ஏதென்றால் ஒரு பிழை சுட்டிக்காட்டப்பட்டால் அதைத் திருத்துவது. அது எப்போதாவது நடக்குமா?

### தன் முதுகு தனக்குத் தெரியாது!

இந்திய எல்லைக்குள், கர்நாடக மாநிலத்தில் உள்ள காட்டுப் பகுதியில் உலாவுவதாக அறிந்து. சந்தனக் கடத்தல் வீரப்பனை இதோ பிடித்து விட்டோம் என்று கர்நாடகப் பொலிசும் இந்தியாவின் பெரிய ஏடுகளும் மார் தட்டின. மாதம் ஒன்றாயிற்று இப்போது வீரப்பனையும் காணோம் வீரப்பன் கடத்திச் சென்ற முன்னாள் அமைச்சர் நாகப்பாவையும் காணோம். இப்போது வீரப்பனுடன் பேரம் பேச ஆள் தேடுகிறது கர்நாடக அரசு!

இந்த லட்சணத்தில். பிரபாகரனைப் பிடித்து அனுப்புமாறு இலங்கைக்குக் கட்டளை போடுவதில் ஒரு குறைச்சலும் இல்லை!

### பொய்யைச் சொன்னாலும்

29.09.2002 வீரகேசரியில். வி.ரி. தமிழ் மாறன் (இவர் இன்னொரு தமிழ் மாறனல்ல என்றே நினைக்கின்றேன்) தமிழ் மக்களது விடுதலைப் போராட்டம் என்றுமே தனி நாட்டுக்கானதாக இருக்கவில்லை என்று விளக்கித் தள்ளியிருக்கிறார். அது மட்டுமன்றி. தந்தை செல்வா தமிழரின் உண்மையான தேவையைக் கண்டறிந்து சொன்ன வகையில் தீர்க்கதரிசி தான் என்றும் ஏதோ சொல்லி வைத்திருக்கிறார். தமிழ் மாறன் பாவிக்கிற அகராதியும் நாங்களெவரும் பாவிக்கிற அகராதி எதுவும் நிச்சயமாக ஒன்றல்ல என்றே தெரிகிறது.

### சிவத்தம்பியின் வீரம்

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட தவறுகள் பற்றித் தொடராக "நோத் ஈஸ்ற் புறொண்டியர்" என்ற வார ஏட்டுக்கு எழுதி வருகிற சிவத்தம்பிக்குத் தான் 1970-77 காலத்தில் அண்டி நின்ற அரசும் அரசியற் கட்சியும் செய்தவை பற்றிப் பேசும் போது தான் இன்னொரு உலகத்தில் இருந்தது போல பேசுகிறார். போகட்டும். தைரியமாக நாலு வார்த்தை பேசுகிறாரே மனிதர் என்று பார்த்தால் செப்ரெம்பர் மாதம் எழுதிய கட்டுரையில் தான் இதையெல்லாம் எழுதுவது எந்த வகையிலும் இனக் குரோதத்தைத் தூண்டுவதற்காக அல்ல என்று வலிந்து விளக்கமும் எழுதியுள்ளார். அவரது நோக்கத்தை அவரது கட்டுரைகளே தெளிவாகக் கூறவில்லையா? சிவத்தம்பி யாருக்குப் பயப்படுகிறார்?

## மறப்பாவும் மறதிப்பாவும்

- ஈழத்துத் தேவன் பூதனார் -

மௌனமாய்ப்போ! தேவையெனில் வசதியாய் மறந்துபோ!
புத்தரும் காந்தியும் யேசுவும் வள்ளுவரும்
சித்தரும் மொத்தமாய் ஒன்றாய்
செத்திடும்படி யாழ்-நூலக
சத்திய சோதனையோடு பைபிளும்
குறளும் தம்மபோதமும் குர்ஆனுமொன்றாய்
கொழுத்திய குண்டரின் தொண்டினை
தமிழா நீ! தமிழின் பேராலே
வசதியாய் மறந்துபோ! மௌனித்துவிடு நீ!
எண்பத்து மூன்றில் தமிழரிலன்பு
பூண்ட சிங்களத் தேசிய எழுச்சியில்
கூண்டோடு கைலாசம் அனுப்பி
மீண்டெமை இரட்சித்த ஆண்டவரே!
தும்பிக்கையான் துணையெனில் பழைய பல்லவியை
தோண்டாமல் ஒன்றாய் மோட்சம் காண்பதற்காய்
தமிழா நீ! தமிழின் பேராலே
வசதியாய் மறந்து போ! மௌனித்துவிடு நீ!
வெலிக்கடைச் சிறையில் ஐம்பத்திவரை
பலியாக்கிய எண்பத்து மூன்று பற்றியொரு
காலங்கடந்தும் விசாரணையில்லை பரவாயில்லை-உறவுப்
பாலமமைத்துப் பயணம் செய்வதற்காய்
தமிழா நீ! இன்தமிழின் பேராலே
வசதியாய் மறந்து விடு! மௌனித்து விடு!
ஊரிழந்தோம் உறவிழந்தோம் வீடிழந்தோம்
நாடிழந்தோம் நடுத்தெரு நாரணராய்
கோவிந்தா போடுகிறோம்-எனினும்
கூடுகிறோம் பேசுகிறோம் குதூகலித்திடுகிறோம்
கெடுக்காதீரதை!
போராயின் போரென்றும்
சமாதானமாயின் சமாதானமென்றும்
புதுக்கீதையுரைத்த ஜே.ஆரின் பேரனார்
சாற்றுகிறார் சமாதானம் என்றேதான்
மறந்திடுவோமா? மௌனித்திடுவோமா?

படிப்பகம்

www.padippakam.com



புதியபூமி
புதிய பூமி REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 09 நவம்பர் 2002 பக்கம் 08 விலை 10/- சுழற்சி 51

எஸ்.47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.: 435117, 335844 பாக்ஸ்: 01-473757

# இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சரியானதா?

நடைமுறையில் இருக்கும் 1978ம் ஆண்டு அரசியல் யாப்பிற்கு உத்தேச 19வது திருத்தச் சட்டம் ஏற்புடையதல்ல என்ற தீர்ப்பை இலங்கையின் உயர்நீதிமன்றம் பாராளுமன்ற சபாநாயகருக்கு தெரிவித்துள்ளது. பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் சட்டமூலமொன்று நடைமுறையில் இருக்கும் அரசியல் யாப்பிற்கு ஏற்புடையதா இல்லையா என்பது பற்றி தீர்மானத்தை சபாநாயகருக்கு அறிவிக்க வேண்டியது உயர்நீதிமன்றத்தின் பொறுப்பாகும். அதன்படி உயர்நீதிமன்றம் அதன் தீர்ப்பை தெரிவித்துள்ளது. அதாவது உத்தேச 19வது திருத்தச் சட்டம் அரசியலமைப்பிற்கு ஏற்புடையதல்லவென்றும் அதனை சட்டமாக்க வேண்டிய பாராளுமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவை பெறவேண்டியதுடன். பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பில் வெற்றி பெறவும் வேண்டும் என்ற சிபாரிசையும் செய்துள்ளது.

இத்தீர்ப்பு வெளியாகிய பிறகு உயர்நீதிமன்றம் எதிர்பார்த்தவாறு 19வது திருத்தச் சட்டத்திற்கு அனுமதி வழங்கவில்லை என்றும். பிரதம நீதியரசர் சரத் என் சில்வா பற்றியும், உயர்நீதிமன்ற நீதியரசர்கள் பற்றியும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. உயர்நீதிமன்றம் பக்கச்சார்பாக நடந்துகொண்டுவிட்டதாக சந்தேகங்களை கிளப்பும் செய்திகளை ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன.

நீதி, சட்டம், ஒழுங்கு எல்லாமே 1978 அரசியல் யாப்பிற்கு உட்பட்டு அதன் அரச யந்திரத்தை பாதுகாப்பதற்கானவடிவங்கள் என்பதை விளங்கிக் கொண்டால் குழப்பங்களுக்கு இடமிராது.

19வது திருத்தத்தை அனுமதிப்பது நல்லதா கூடாதா என்பது இன்னொரு பிரச்சினை ஆனால் உயர்நீதிமன்றம் அனுமதித்திருக்க முடியுமா என்பதே எம்முன்னுள்ள பிரச்சினை. பிரதம நீதியரசரையும் சில உயர்நீதிமன்ற நீதியரசர்களையும் ஜனாதிபதி சந்திரிகா தான் நியமித்தார் என்பதற்காக. உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஜனாதிபதியின் முன்பாக சத்தியப்பிரமாணம் செய்கின்றனர் என்பதற்காக 19வது திருத்தம் அரசியலமைப்பிற்கு ஏற்புடையதல்ல என்று தீர்ப்பளிக்கப்பட்டதா என்ற சந்தேகத்தையே ஊடகங்கள் கிளப்புகின்றன.

நீதி என்பது சட்டத்திற்கு அப்பாற்பட்டதல்ல. அதனையே இச்சமூக அமைப்பு எமக்கு மீண்டும் மீண்டும் உணர்த்துகிறது. அந்தவகையில் அரசியலமைப்பின் அடிப்படைகளை மாற்ற வேண்டுமெனில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு ஆதரவும், பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பில் வெற்றியும் அவசியம் என்பதை சாதாரணமான அரசியல் அறிவுள்ள ஒருவர் விளங்கிக் கொள்வார்.

அவ்வாறான விடயங்களை மாற்றுவதற்கு தனியொரு கட்சியின் பலம் மட்டும் போதாது. விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் தனியொரு கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெறுவது சாத்தியமில்லை. அவ்வாறான நிலையில் ஒரு கட்சி மட்டும் எந்தவொரு அரசியலமைப்பு மாற்றத்தை அரசியலமைப்பிற்கு இணங்கி செய்ய முடியாது.

இலங்கையை தொடர்ந்து ஆட்சி செய்து வரும் ஐ.தே.கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையே வர்க்க நிலைப்பாட்டில் வித்தியாசம் கிடையாது. வர்க்க நிலைப்பாட்டில் வித்தியாசம் இருந்த காலத்தில் ஒன்றின் நிலைப்பாட்டை மற்றொன்று எதிர்த்ததற்கு காரணமிருந்ததாக கொள்ள முடியாது. அதாவது ஐ.தே.கட்சி முழுக்க முழுக்க பெருமுதலாளித்துவத்தை பிரதிநிதித்துவம் செய்ய சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேசியமுதலாளித்துவத்தை ஓரளவாவது பிரதிநிதித்துவம் செய்தது. தற்போது இரண்டு கட்சிகளும் ஏகாதிபத்திய உலகமயமாதலை முழுமையாக ஆதரிக்கின்ற கட்சிகளாக இருக்கின்றன. ஆனால் ஒன்றின் நடைமுறையை இன்னொன்று எதிர்ப்பதற்கு காரணம் ஆட்சியதிகாரப் போட்டியேயன்றி வேறில்லை.

அவ்விரண்டு கட்சிகளின் வர்க்க நலன்களுக்கு எமது நாட்டில் சமாதானம் தேவையா இல்லையா என்பதை பொருத்தே அவற்றின் நிலைப்பாடு இருக்கும். தற்போதைய நிலையில் அவை இரண்டுமே சமாதானம் பற்றி பேசுகின்றன. அவ்வாறாயின் இரண்டு கட்சிகளும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்தாலன்றி சமாதானநடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்க முடியாது. ஜனாதிபதியை விரோதித்துக் கொண்டு ஐ.தே.மு. அரசாங்கத்திற்கு அரசாங்கத்தை நடத்த முடியாது. அதேபோன்று ஐ.தே.மு. அரசாங்கத்தை விரோதித்துக் கொண்டு ஜனாதிபதி சுமுகமாக இயங்க முடியாது.

இந்தச் சூழ்நிலையில் 19வது திருத்தச் சட்டமூலம் ஜனாதிபதியை எதிர்நிலைக்குத் தள்ளும் விளைவையே ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் என்பது பாராளுமன்றத்தை ஒத்தி வைக்கும், கலைக்கும் அதிகாரம் மட்டுமல்ல. எனவே அதை மட்டும் பறிக்கும் 19வது திருத்தச் சட்டமூலம் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் அனைத்தையும் பறிக்கும் நோக்குடன் கொண்டு வரப்படவில்லை.

அத்துடன் அச்சட்டமூலத்தை ஆக்கியவர் ஐ.தே.மு.யின் முக்கிய அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான ஷொக்சியாவார். அச்சட்டமூலம் 1978 அரசியலமைப்பிற்கு முரணானது என்பதையும் அதனை நிறைவேற்ற பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் தேவை என்பதையும், பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பில் வெற்றி அவசியம் என்பதையும் அவர் அறிந்திருக்கவில்லை என்று நினைப்பது அறிவீனம்.

அப்படியாயின் அச்சட்டமூலத்தை ஐ.தே.மு. அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது ஏன்? அதிகாரப் போட்டியின் விளைவே ஆகும். அதாவது வேறு வழிகளில்லாத (பொதுசன ஐக்கிய முன்னணி எம்.பி.க்களை வாங்கி) அச்சட்டத்தை நிறைவேற்றி ஜனாதிபதியை வலுவிழக்கச் செய்ய அதீத நம்பிக்கையுடன் ஐ.தே.மு. எடுத்த முயற்சியே அதுவாகும். அச்சட்டமூலத்தின் முன்னுரையில் குறிப்பிட்டிருப்பது போன்று சமாதானத்தை நிலைநாட்டவும், நாட்டை அபிவிருத்தி செய்யவும் அதனை சட்டமாக்க நினைக்கவில்லை.

அச்சட்டமூலத்தில் குறிப்பிட்டிருந்த நோக்கம் உண்மையான நோக்கமல்ல என்பதாலும், அதனை அரசியலமைப்பிற்கு உட்பட்டு நிறைவேற்ற முடியாது என்று தெரிந்து கொண்டும் அதனை நிறைவேற்றுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் இந்நாட்டு மக்களை ஏமாற்றுவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளே என்பது தெளிவாகிறது.

ஊடகங்கள் இவ்விடயத்தில் உயர்நீதிமன்றத்தையோ பொதுசன ஐக்கிய முன்னணி எம்.பி.க்களையோ குறை கூறுவதை விடுத்து ஐ.தே.மு.யின் உள்நோக்கத்தை புரிந்து கொண்டு கருத்துக்களை வெளியிடுவதே சிறந்தது.

1978ம் ஆண்டு அரசியலமைப்பை மாற்ற வேண்டுமெனின் அரசியலமைப்பு புரட்சியொன்றின் மூலமே மாற்ற முடியும். அதற்கு ஐ.தே.கட்சி தயாரா? சுதந்திரக் கட்சி தயாரா? தயாரில்லாவிட்டால் சமாதான பேச்சுவார்த்தைகளினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு எய்தப்படுமாயின் அதனையும் அரசியலமைப்பில் இணைத்துக் கொள்ள முடியாது. இதுவே உண்மையான நிலை என்பதை புரிந்து கொள்ள நினைப்பவர்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

- ஆசிரியர் குழு-

# பேச்சுவார்த்தையும் பேரினவாதிகளும்

## பழைய கரங்களும் புதிய முகங்களும்

தேசிய இனப்பிரச்சினைக்கான பேச்சு வார்த்தை கட்டம் கட்டமாக முன் நோக்கிச் செல்கின்றது. இரு தரப்பினரும் முடிந்தளவுக்கு விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வுடன் நடந்து கொள்வதை அவதானிக்க முடிகின்றது. அதேவேளை இரு தரப்பினருக்கும் தத்தமது நிலைப்பாடுகளில் உள்ளார்ந்த உறுதிப்பாடுகள் இருந்து வருவதையும் அவை ஏதோ ஒரு இடத்தில் இறுகிக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் வந்துவிடுமோ என்ற அச்சமும் காணப்படுகின்றது. இவ் விடயத்தில் இரு தரப்பினருமே நாட்டையும் அனைத்து மக்களையும் மையப்படுத்திய தூரநோக்குடன் செயல்பட வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தையின் மூலம் யுத்தத்திற்கு ஒரு முடிவும் நிரந்தர சமாதானமும் உருவாக வேண்டும் என்பது யுத்தத்தின் பன்முகப் பாதிப்புக்களை அனுபவித்த மக்களின் பெரு விருப்பமாகும். அதேவேளை இத்தகைய ஒரு சமாதான இயல்பு நிலை நியாயமான அரசியல் தீர்வின் ஊடாக மட்டுமே நிரந்தரம் பெற முடியும் என்பதும் உண்மையாகும்.

தற்போதைய பேச்சுவார்த்தையூடாக பல்வேறு சக்திகள் தத்தமது நலன்களை உறுதிப்படுத்திக் கொள்ள விரைந்து செயல்படுகின்றன. அவற்றில் அந்நிய ஏகாதிபத்திய உலகமயமாக்கல் பல்தேசிய நிறுவனங்கள் ஒன்றை ஒன்று முந்திக் கொள்வதில் போட்டியிட்டு உட்புகுந்து கொள்ள திரை மறைவு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றுடன் முக்கியமான பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குவதில் அமெரிக்கா மும்மரம் காட்டி நிற்கிறது. அத்தகைய ஒப்பந்தம் இரு புறத்து உயர்மட்ட அதிகாரிகளால்இதுவரை பல தடவைகள் பரிசீலிக்கப்பட்டு திருத்தங்களுக்கு உள்ளாகி வருகின்றது. பேச்சுவார்த்தையின் ஒரு முக்கிய கட்டத்தில் இவ் இலங்கை-அமெரிக்கப் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்பது உறுதி செய்யப்பட்டும் உள்ளது. சமாதானத்தின் விளைவுகள் மக்களுக்கு எவ்வளவு சாதக மானவையோ அதைவிட சமாதானத்தின் மூலமான அந்நிய ஏகாதிபத்திய சக்திகளின் பொருளாதார ராணுவ ஊடுருவல்களும் அவற்றுக்குரிய ஒப்பந்தங்களும் முழு நாட்டிற்கும் மக்களுக்கும் பல மடங்கு பாதகமானவைகளாக அமையப் போகின்றன. ஒரு நாட்டிற்குள் புகுந்து கொள்வதற்கும் அந் நாட்டின் வளங்களைக் கொள்ளையிடுவதற்கும் அந் நிய ஏகாதிபத்திய சக்திகள் எவ்வாறு காய்களை நகர்த்தி நிர்ப்பந்த சூழலை ஏற்படுத்திக் கொள்கிறார்கள் என்பதற்கு இலங்கையின் கடந்த கால் நூற்றாண்டு கால அனுபவங்கள் ஆழ்ந்து படிக்கப்பட வேண்டியவைகளாகும்.

இவ்வாறான ஒரு நிலை தோன்றி வளர்வதற்கு கடந்த நூற்றாண்டின் ஆளும் வர்க்க சக்திகள் 'இனவாதத்தை வளர்த்து பேரினவாத வெறியாக மாற்றியதுடன் ராணுவ ஒடுக்கு முறையாக்கியும் வந்த வரலாறு தெளிவானதாகும். தேசிய இனப்பிரச்சினையை அதன் ஆரம்ப நிலையிலேயே உரியவாறு அடையாளம் கண்டு அதன் எதிர் கால விளைவுகள் பாரதூரமானவைகளாக அமையப் போகும் அபாயத்தை தூரநோக்குடன் முன்னுணர்ந்து தீர்வு காணப்பட்டிருப்பின் நாடு இன்றைய அவலத்தைக் கண்டிருக்கமாட்டாது. இனப்பிரச்சினை ஒரு குறிப்பிட்டளவு எல்லைக்கு மட்டுமே இனத்துவ அம்சங்களைக் கொண்டதாகும். அதற்கு அப்பால் அது அடிப்படையில் வர்க்கப் பிரச்சினையேயாகும். எனவே ஆளும் வர்க்கங்களின் தேவைக்காக வளர்க்கப்படும் இனப்பிரச்சினையானது அதே வர்க்க நலன்களுக்கு நெருக்கடிகளையும் பிரச்சினைகளையும் ஏற்படுத்திக் கொள்ளும் போது பேச்சு வார்த்தை தீர்வு அவசியம் என்ற ஒரு நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்படுகின்றது.

இருப்பினும் தமது வர்க்க நலன்களின் கவசமாக உள்ள பேரினவாதத்தை கைவிடுவதற்கு அவர்கள் தயாராக இருக்கமாட்டார்கள்.

இன்று இலங்கையின் பெருமுதலாளித்துவ பேரினவாத ஆளும் வர்க்க சக்திகள் தமக்கும் தமது எசமான ஏகாதிபத்தியத்தினதும் நலன்கள் பாதுகாக்கப்படுவதற்கு அளவான ஒரு தீர்வுக்குரிய பேச்சுவார்த்தையையே முன் நிறுத்தி நிற்கின்றன என்பது வெளிப்படை. இருப்பினும் அந்தப் பேச்சுவார்த்தையில் வடக்கு-கிழக்கு மக்களினது தேவைகளும் அபிலாஷைகளும் சமாதானத்தின் அவசியமும் உள்ளடங்கி நிற்பதனை நிராகரிக்க முடியாது.

இவ்வாறு தெற்கின் பேரினவாத ஆளும் வர்க்க ஆட்சியாளர்கள் பேச்சு வார்த்தைக்கு முன் வந்து அதனை கட்டம் கட்டமாக முன்னெடுத்து வரும் சூழலில் மற்றொரு பகுதியினரான பேரினவாத சக்திகள் வழிவழிவந்த குழப்பக் கூச்சலை உச்ச நிலைப்படுத்த முயன்று வருகிறார்கள். பேரினவாதத்தின் பழையகரங்கள் பேச்சு வார்த்தை மேசையில் தமது காய்களை தவிர்க்கவியலாத சூழலில் நகர்த்தி வருகின்ற அதேவேளை பேரினவாதத்தைப் புதிய முகங்கள் பொறுப்பேற்று வீதியில் இறங்கி நின்று பேச்சு வார்த்தையைக் குழப்ப முற்பட்டுள்ளன.

**- வெகுஜனன் -**

இந்தப் பேரினவாதத்தின் புதிய முகங்களாக முன்னாள் கிளர்ச்சிக்காரர்களான ஜே.வி.பி.யினர் விளங்குகின்றனர். பழைய கரங்களில் ஒரு பகுதியினரான சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் முழுமையாகப் பேரினவாதத்தைக் கக்கவும் முடியாது விழுங்கவும் முடியாது திக்குமுக்காடி வருகின்றனர். அவர்களது நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாக தமக்குரியவற்றைச் செய்து கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் இருந்தும் வருகின்றனர். அவர்களுக்கு பேச்சுவார்த்தை இடம் பெறுவதே கசப்புக்குரிய தொன்றாகவே இருந்து வருகின்றது. எனவே வீதியில் இறங்கி பேரினவாத வெறிக்கூச்சலை முன்வைத்து பேச்சுவார்த்தையைக் குழப்புவதை விட நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாக அதற்கு மண்போட்டுக் கொள்ளவே விரும்புகிறார்கள்.

ஆனால் ஜே.வி.பி.யானது பகிரங்கமாக வீதியில் இறங்கி பேரினவாத வெறிக்கூச்சலைப் போட்டு குழப்ப முன் நிற்கிறது. ஜே.வி.பி. கூறுவது போன்று 'பிரிவினை இல்லாத, 'சமத்துவமான, 'சிங்கள தமிழ் முஸ்லிம் ஐக்கியம்' போன்றவற்றுக்காகப் பேச்சு வார்த்தையை நிராகரிக்கவில்லை. அவர்களது நோக்கும் போக்கும் பேரினவாதத்தை தமது கரங்களில் எடுத்து ஆட்சி அதிகாரத்தை நோக்கிச் சென்று விடலாம் என்பதேயாகும். ஏற்கனவே பாராளுமன்றத்தில் பெற்றுக் கொண்ட பதினைந்து ஆசனங்களையும் உரத்த தமது பேரினவாத நிலைப்பாட்டால் இரட்டி மடங்காக்கிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை ஜே.வி.பி.க்கு உண்டு. அவ்வாறு பெற்றுக் கொள்வதால் உள்ளார்ந்த ரீதியில் பலவீனமடைந்து காணப்படும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஒரு கூட்டரசாங்கத்தில் பங்கு கொள்ளலாம் என்ற நப்பாசையும் அவர்களுக்கு உண்டு.

இவற்றுக்கும் அப்பால் ஜே.வி.பி.க்கு தனி அதிகாரப் பேரவாவும் உண்டு. ஜே.வி.பி. அன்று ஆயுதம் தூக்கி கிளர்ச்சியில் ஈடுபட்ட வேளை ஒரு சிறு முதலாளித்துவப் போராட்டத் தலைமையாகவே இருந்தது. அது மக்களை ஏமாற்ற சிகப்புக் கொடியைத் தூக்கி நின்றது. பெரும் போராளித் தலைவரான சேகுவேராவின் பெயரைப் போலித்தனமாக உச்சரித்துக் கொண்டது. ஆனால் தவறான கொள்கை தந்திரோபாயம் மட்டுமன்றி அடிப்படையில் மக்கள் விரோத நிலைப்பாடு காரணமாகப் படுதோல்வி கண்டு பல்லாயிரக் கணக்கான இளைஞர். யுவதிகளையும். மக்களையும் அரசு யந்திரத்திற்குப் பலி கொடுத்துக் கொண்டது.

ஆனால் இன்றோ ஜே.வி.பி. தேசிய முதலாளித்துவ நிலைக்கு வந்து விட்டது. அது தனது சிவப்புப் போர்வையைக் கழற்றி வருகிறது. முன்பு தேசிய முதலாளித்துவப் பாதைக்கு இனவாதத்தை எவ்வாறு பண்டாரநாயக்கா குடும்பம் பயன்படுத்தி அதன் ஊடாக அதிகாரத்திற்கு வந்து கொண்டதோ அவ்வாறே தாங்களும் வந்து விடலாம் என்ற நம்பிக்கையுடனேயே ஜே.வி.பி. தற்போது பேச்சுவார்த்தையைக் குழப்பும் பேரினவாதக் கூச்சலில் இறங்கி நிற்கின்றது. அவர்களை முன்தள்ளி அதன் மறைவில் பழைய பேரினவாதக் கரங்கள் சிலவும் இருந்து செயல்பட்டும் வருகின்றன. இவர்களது பேரினவாத பிரசாரத்தை உச்ச நிலைப்படுத்தி அதன் மூலம் பேச்சுவார்த்தைக்கு வேட்டு வைத்து யுத்த சூழலைக் கொண்டு வரவே இந்திய மேலாதிக்க சக்திகள் பின்னால் இருந்து செயற்பட்டு வருகின்றமையையும் காணமுடிகின்றது.

இந் நிலையில் பேச்சுவார்த்தை குழப்பப் படக் கூடாது என்பதில் சமாதானம் விரும்பும் யுத்தத்தை எதிர்க்கும் அனைத்து நேர்மையான சக்திகளும் ஒரு முகமாக நின்று நியாயமான அரசியல் தீர்வுக்கும் நிரந்தர இயல்பு வாழ்வுக்கும் குரல் கொடுத்து பலம் சேர்க்க வேண்டும்.

# 1966 ஒக்டோபர் 21 எழுச்சியின்

## 36வது வருட நினைவு

சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிரான மாபெரும் மக்கள் எழுச்சி 1966ம் ஆண்டு ஒக்டோபர் 21ல் இடம்பெற்றது. அந்த எழுச்சிதோற்றுவித்த புரட்சிகர அதிர்வுகளே பின்பு சாதியத்தின் தீண்டாமைக்கும் எதிரான வெகுஜனப் போராட்டங்களாகின. வரலாற்றுத் திருப்பு முனையாக அமைந்த அவ்வெழுச்சி தமிழ் மக்களது எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கினரான தாழ்த்தப்பட்ட மக்களது மறுக்கப்பட்டு வந்த ஜனநாயக மனித உரிமைகளை வழி வகுத்தது. அதன் வழியில் தொடர்ந்தும் சாதியத்திற்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையே இன்றைய சமூக நிலைமைகள் வற்புறுத்து கின்றன. அவற்றை எத்தகைய முனைகளில் எவ்வாறான வடிவங்களில் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்பதையிட்டு சிந்தித்து செயல்பட சாதியத்திற்கெதிரான சகல சக்திகளும் முன்வரல் வேண்டும்.

மேற்படி ஒக்டோபர் 21எழுச்சியின் 36வது வருட நினைவாக கருத்தரங்கு ஒன்றினைப் புதிய-ஜனநாயக கட்சியின் வடபிரதேச குழு யாழ்ப்பாண த்தில் 27-10-2002ல் அன்று நடாத்தியது. சமகாலச் சமூகச் சூழலில் சாதியம் என்னும் தலைப்பில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் உரையாற்றினார். கருத்தரங்கிற்கு தாயகம் சஞ்சிகையின் ஆசிரியர் தோழர்.க.தணிகாசலம் தலைமை தாங்கினார். பெருந்தொகையான சமூக அக்கறையாளர்கள் கலந்து கொண்ட இக் கருத்தரங்கு ஆரோக்கியமான கலந்துரையாடலைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ●

படிப்பகம்

www.padippakam.com



# மலையகத் தமிழ் தேசிய இனமும் அவர்களின் பிரதேசமும்

- ம. அழகேசன் -

மலைகளை மட்டமாக்கிவிட்டால் மலைகளில் வாழும் குர்திஷ் மக்கள் இருக்கவேமாட்டார்கள். இது குர்திஷ் மக்களுக்கு எதிராக மீதான அடக்கு முறையாளர்களின் நிலைப்பாடு இதே நிலைப்பாட்டையே எல்லா இன மேலாதிக்க வாதிகளும் கொண்டிருக் கின்றனர்.

மலையகத் தமிழ்மக்கள் வாழும் பிரதேசம் புவியியல் ரீதியாக தொடர்ச்சியற்ற தாக்கப்பட்டிருப்பதால் அவர்களை ஒரு தேசிய இனமென்று அழைக்க முடியாது என்று ஒரு சிலர் எண்ணுகின்றனர். இவ்வாறான எண்ணத்தை மலையகத் தமிழ் தேசிய இனத்தை சேர்ந்தவர் களும் கொண்டிருக்கின்றனர் என்பது தான் ஆச்சரியமானதாகும். இதற்கு அறியாமையும் காரணமாக இருக்க லாம். பயமும் காரணமாக இருக்கலாம்.

ஒரு தேசிய இனமாக தேசமாகி தனி நாடாவதற்கு ஆள்புலம் அல்லது எல்லை அவசியமாகும். அது கூட அவ்வாட் புலத்தில் வேறெந்த இனத்தவரும் வாழக்கூடாது என்றாகாது! தேசமாக, தனிநாடாவதற்கு ஒரு ஆள்புலத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியுமாயின் போதுமானதாகும். ஒரு இனத்திற்கு தொடர்ச்சியான புவியியல் பிரதேசம் இருக்க வேண்டும் என்பது கூட மேற்படி ஆள்புலம் அவசியமென்ற அடிப்படையை கொண்டதாகும்.

மலையகத் தமிழ் மக்கள் மலை நாட்டில் குறிப்பாக தேயிலை, றப்பர் பெருந் தோட்டப் பிரதேசங்களில் செறிவாக வாழ்ந்தனர். அத்தோட்டங்களை அவர்களது உழைப்பால் அவர்களே உருவாக்கினார்கள். 1931இற்கு பிறகு பெருந்தோட்டப் பகுதிகளில் பெரும் பான்மை இன குடியேற்றங்கள் திட்ட மிட்ட வகையில் மேற்கொள்ளப் பட்டன. அத்துடன் காடு வளர்ப்பு. நீர்த்தேக்கத் திட்டங்களினாலும் பெருந்தோட்ட நிலங்கள் பறிக்கப்பட்டன. இத் திட்டங் களுக்கு முன்பும் கூட சிங்கள மக்களுக்கு மத்தியில் பெரும்பாலான தோட்டத்தொழிலாளர்கள் வாழ்ந்தனர். ஆனால் அக்காலத்தில் மலையகத்தில் மலையகத் தமிழ் மக்கள் வாழ்ந்த. அவர்களின் பெருந்தோட்டப் பகுதி புவியியல் ரீதியாக தொடர்புபட்டதாக இருந்தது. மேற்படி திட்டமிட்ட நடவடிக் கைகளால் அப்புவியியல் தொடர்ச்சி யற்றதாக்கப்பட்டது. அதாவது மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில் அவர்கள் வாழ்ந்த பகுதிகள் புவியியல் ரீதியாக தொடர்ச்சியானதாக இருந்ததை மேற்படி திட்டங்களால் தொடர்ச்சியற்றதாக்கப்பட்டது.

தேசிய இனமென்ற அங்கீகாரம் என்பது ஒரு மொழியை பேசுகின்ற, ஒரு பண்பாட்டைக் கொண்ட மக்களுக்கு வேறு இனரீதியாக அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகளிலிருந்து கிடைக்கும் பாதுகாப்பின் அத்திவாரமாகும். தேசிய இன அங்கீகாரத்திற்கு கோட்பாட்டை குறிப்பான சூழ்நிலைக்கு ஏற்ப பிரயோ கிக்காவிடின் தேசிய இனங்களுக்கு அக்கோட்பாட்டால் பாதுகாப்பு இருக் காது. ஒரு இனத்திற்கு தொடர்ச்சி யான புவியியல் பிரதேசம் இருந்தால் தேசிய இனமென்று அங்கீகரிக்க வேண்டி வரும் என்பதற்காகவே இன மேலாதிக்கவாதிகள் அப்பிரதேசத்தை அவ்வினத்துக்குரிய பிரதேசமாக இருப்பதை திட்டதிட்ட குடியேற்றங்கள் போன்றவற்றால் சீர்குலைக்கின்றனர். சீர்குலைத்துவிட்டு தேசிய இனமு மில்லை என்று அவர்கள் கூறலாம். ஆனால் அடக்குமுறைகளுக்கும் மேற்படி சீர்குலைவிற்கும் உட்பட்ட இனம் அதனை ஏற்றுக் கொள்வது என்பது பேரின ஒடுக்குமுறையையும். பேரின மேலாதிக்கத்தையும் ஏற்றுக் கொள்வதாகும். இன மேலாதிக் கத்திடமிருந்து ஒரு இனம் ஓரளவாவது பாதுகாக்கப்படுவதற்கு புதிய வழிமுறை கள் நடைமுறையில் நிரூபிக்கப்பட் டுள்ளன. அதன்படி தொடர்ச்சியற்ற புவியியல் பிரதேசத்தில் வாழும் இனத்திற்கு மட்டுமன்றி ஒரு நாட்டில் தனித்தனியாக சிதறி வாழும் இனங் களுக்கும் புவியியல் பாதுகாப்பளிக்கும் முறைகள் இருக்கின்றன.

மலையகத் தமிழ் மக்களைப் பொருத்த வரை முற்றாகவே ஒரு பிரதேசம் இல்லாதவர்களாக இல்லை. அவர்கள் பல பிரதேசங்களில் செறிவாகவும். பல இடங்களில் சிதறியும் வாழ்கின்றனர். வாழ்விட பிரதேசமே இல்லாத இனமாக மலையகத் தமிழ் மக்கள் வாழவில்லை அதாவது அவர்கள் வாழும் பிரதேசத் தை பிரத்தியேக மாகாணங்களாக. மாவட்டங்களாக அடையாளம் காண முடியாமல் இருக்கலாம். ஆனால் பிரதேசங்களைக் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

மத்திய. ஊவா. சப்ரகமுவ மாகாணங் களில் அவர்கள் செறிவாக வாழும் பிரதேசங்களை அடையாளம் கண்டு இணைப்பதே அவர்களின் நிர்வாக அல்லது சுயாட்சி அலகாக இருக்க முடியும். அதுதான் அவர்களின் பிரதேசம். அதனை தனிநாடாகவோ. தனி சமஷ்டிப் பிரதேசமாகவோ கொள்ள முடியாவிட்டாலும் அவர்களது விவகாரங்களை அவர்களே கையாளும் சுயாட்சி அமைப்பை ஏற்படுத்த முடியும்.

இவ்வாறு புவியியல் தொடர்ச்சியற்ற நிலையில் செறிந்தும், பரந்தும் வாழும் இனங்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப் புக்கள் எம் கவனத்திற்குரியன. சுயாட்சி அமைப்புகள், உள்ளமைப்புகள். உப அமைப்புக்கள் என்பன சில நாடுகளில் உறுதி செய்யப்பட்டுள்ளன. அவற்றி லிருந்து அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். அதாவது செறிந்து வாழும் பகுதிகளில் ஏற்ற சுயாட்சி அமைப்புகளையும் உள்ளமைப்பு களையும், பரந்து வாழும் பகுதிகளில் உப உள்ளமைப்புகளையும் ஏற்படுத்த முடியும்.

இது பற்றி சில நாடுகளில் மட்டுமன்றி ஐ.நா.சபையும் பல தேடல்களையும் சிபாரிசுகளையும் செய்துள்ளது. அவற்றின் சிபாரிசுகளையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே பிரதேசம் இல்லாமலாக்கப் பட்டுவிட்டது அல்லது இல்லாமலாக்கப் பட்டுவிடும் என்ற நிலையிலிருந்து மலையகத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமல்ல என்ற முடிவுக்கு வருவது தற்கொலைக்கு ஒப்பானதாகும். தற்போது இருக்கின்ற பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு பாதுகாப்புக் களை அடிப்படையாகக் கொண்டு பாதுகாப்புக்களை தேடிக்கொள்ள வேண்டும்.

அத்துடன் எதிர்காலத்தில் மேலும் மலையகத் தமிழ் மக்களின் செறிவை குலைக்கும் நோக்கில் மேற்கொள்ளப் படும் திட்டமிட்ட நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டும். அதாவது திட்டமிட்ட குடியேற்றங்கள் நீர்த்தேக்கத் திட்டங்கள் என்பவற்றை தடுத்து நிறுத்த வேண்டும்.

மலையகத்தில் பெருந்தோட்டங்களையும் அதனை சூழந்த பகுதிகளில் மலையகத் தமிழர்கள் பிரத்தியேகமாக வாழாமல். சிங்கள மக்களும் கலந்த நிலையிலும் வாழ்ந்தாலும் பெரும்பான்மையான மலையகத் தமிழ் மக்கள் அப்பகுதி களையே தமது பிரதேசமாகவும் கொள்கின்றனர். ஒப்பீட்டு ரீதியில் அப் பிரதேசங்களையே தமது பாதுகாப்பான பிரதேசமாக கொள்கின்றனர். உளரீதி யாக தங்களுக்கு மகிழ்ச்சி தரும் பிரதேசமாகவும் கொள்கின்றனர். இதைவிட மலையகத் தமிழ் மக்களின் பிரதேசத்தை அடையாளம் காண்பதற்கு இன்றைய நிலையில் வேறெந்த அடிப்படைகளும் தேவைப்படமாட்டாது.

---

ஆறுமுகன் என்ன...

1ம் பக்க தொடர்ச்ச..

மலையகத்தமிழ் மக்களுக்கும் ஒரு தனியான நிர்வாக அலகு தேவை யென்றும் ஆறுமுகன் அண்மையில் கூறியிருக்கிறார். அதாவது முஸ்லீம் மக்களுக்கு தனியான அலகு கொடுக்கப்படுமானால் மலையகத்தமிழ் மக்களுக்கும் அவசியமாகும் என்று கூறியுள்ளார். அதுவும் ஐ.தே.முன்னணி க்குள் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

காலஞ்சென்ற சௌமியமூர்த்தி தொண்டமான் இவ்வாறு கோரிக்கை களை முன்வைத்து அதன்மூலம் அரசாங்கங்களிடம் அவரது இடத்தை உறுதிசெய்து கொள்வதை வழக்க மாகக் கொண்டிருந்தார். அதாவது கோரிக்கைகளை முன்வைத்து அதற்காக மக்களிடம் சென்று கூட்டங்களை நடத்தி அரசாங்கத்திற்கு அவரின் பலத்தை காட்டுவார். அரசாங் கம் அவரது பலத்தை ஏற்றுக்கொண்டு, அவரது இடத்தை உறுதி செய்தவுடன் முன்வைத்த கோரிக்கைகளை மெல்ல மெல்ல கைவிட்டுவிடுவார்.

அதேவேலையைத்தான் ஆறுமுகன் தொண்டமானும் செய்ய முயற்சிக்கிறார். அவரது முதலாளித்துவ வர்க்க நிலைப்பாடு வரையறைக்குட்பட்டது தானே. மக்களின் கோரிக்கைகளை ஒரு மட்டத்துக்கு எடுத்துச் செல்வது போல் அவரது நடவடிக்கைகள் இருந் தாலும் உண்மையில் தொழிலாளவர்க்க நலன்களுக்கு அமைவானதாகாது.

மக்களது கோரிக்கைகளை வென்றெ டுக்க மக்களின் பங்களிப்பே முதன்மை யானது. சிலவேளைகளில் மக்களின் கோரிக்கைகளை ஆறுமுகம் போன்ற வர்கள் முன்னெடுப்பது மக்களின் தேவைகளுக்காகவல்ல என்பதை புரிந்துகொள்வது நல்லது.

---

## பத்மநாப ஐயருக்கு ஒரு செய்தி

இரண்டு-மூன்று வருடங்கள் முன்பு ஐரோப்பியத் தமிழ் ஏடொன்றுக்காக பத்மநாப ஐயரைச் செவ்வி கண்ட யமுனா ராஜேந்திரன் என்பவர் இப்போது அதே செவ்வியை ஐயருடைய மணிவிழாவினை நினைவு கூர்ந்து செய்தது போல சோடித்து அது இங்கே தினக்குரலிலும் வெளியானது. பத்மநாப ஐயர் ஒன்றும் க.வே.சுவாமிநாதய்யரல்லர். என்றாலும், ஈழத் தமிழ்ப் படைப்பாளிகளின் ஆக்கங்களை வெளியிடுவதில் அவர் காட்டி வந்துள்ள அக்கறை மெச்சத்தக்கது. அதேவேளை பத்மநாப ஐயர் இடதுசாரி எதிர்ப்புச் சூழ்ச்சிக்காரருக்கு எப்போதுமே இனியவராகவும் இருந்து வந்திருக்கிறார்.

ஐயரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளையிட்டோ அவரது இலக்கிய ரசனையையிட்டோ அவரது அரசியலையிட்டோ அவரைக் கடிந்து கொள்வது நம் தேவையல்ல. எனினும் மாமூலாகச் சொல்லப்பட்டு அள்ளுண்டு போன பொய்களை இருபது ஆண்டுகட்குப் பின்பும் அவர் மீளச் சொல்வதை நாம் ஏற்க முடியுமா?

அலை பத்திரிகை ஏன் வெளிவரத் தொடங்கியது என்பது தொடர்பாகப் பேசுகையில் கைலாசபதி. சிவத்தம்பி போன்றோரின் முன்னுரையின்றி நூல்களை வெளியிட முடியாத ஒரு நிலை இருந்ததாலேயே நூல் வெளியீட் டில் தாங்கள் இறங்க நேர்ந்தது என்று சொல்லியிருக்கிறார். இதற்கு ஆதாரம் என்ன? 1960 முதல் 1980 வரை வந்த நூல்கள் எத்தனை. சஞ்சிகைகள் எத்தனை.இவற்றுள் எவ்வளவு பங்கு இடதுசாரி 'ஆதிக்கத்துக்குட்பட்டது. எவ்வளவு பங்கு கைலாசபதி. சிவத்தம்பி போன்றோரின் முன்னுரையுடன் வந்தது என்ற விபரங்களை ஐயர் முன்வைப்பாரானால் நல்லது. முடியாவிட்டால் உண்மையைத் தேடி அறியும் வரை பழைய பொய்களை மீளச் சொல்லாதிருப்பது நல்லது.

---

# எல்லாம் உலகமயம்?

## -ஐ.ஐ.ஒ.-

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' - இது ஒரு பழைய பாட்டு வரி - கணியன் பூங்குன்றனார் என்று ஒருவர் இதைப் பாடினாராம். ஆராய்ச்சி மாநாடுகளில் அறிஞர்கள் அடிக்கடி இதைச் சொல்லுவார்கள். விதந்து பாராட்டி வியந்து போற்றிப் பரவசம் அடைவார்கள். அது ஒரு காலம்.

பூங்குன்றனார் கணித வல்லுநர். ஊரும் உலகமும் எப்படிப்பட்டவை என்பதைப் புத்தி பூர்வமாகப் பார்த்துச் சிந்தித்த ஒரு புலவராய் இருந்திருப்பார் போலும். என்றாலும் நெடுந்தூரப் பயணங்கள் அதிகம் நடைபெற்றிருக்காத பழைய காலத்தில் வாழ்ந்தவர். அவர். அவருடைய காலத்தவர்கள் அறிந்திருந்த உலகம் எவ்வளவு பெரியது? என்ன 'உருவம்' உடையதாய் இருந்தது - இவை பற்றி நமக்கு நிச்சயமாகத் தெரியாது. எது எப்படி இருந்த போதிலும், பல வகைப்பட்ட ஊர்களைப் பற்றித் தெரிந்தவர் அந்தப் புலவர் என்பது நிச்சயம்.

ஊர்கள் பலவிதமானவை - அவற்றில் வாழும் மக்களும் பல விதமானவர்கள் - 'உலகம் பல விதம்'.

என்றாலும் அந்தப் பல விதங்களுக்கும் வித்தியாசங்களுக்கும் வேறுபாடுகளுக்கும் கூறுபாடுகளுக்கும் அப்பால், எல்லா ஊர்களுக்கும் பொதுவான சில பண்புகள் உண்டு. சில இயல்புகள் உண்டு. இந்த உண்மை பற்றிய விழிப்பு - ஒரு தெளிவு - கணித வல்லுநரான புலவர் பூங்குன்றனாரக்கு இருந்திருக்க வேண்டும். அதனாலே தான் 'யாதும் ஊரே' என்று அவர் தாம் அறிந்த அந்த உண்மையைச் சூத்திரம் பண்ணினார் - சூத்திரித்தார்.

சரி, ஊர் என்றால் என்ன? காணியும் பூமியும். குண்டும் குழியும். குன்றும் குளமும். காடும் கரம்பையும். ஆடும் மாடும், கோழியும் காகமும் - இவை எல்லாம் ஊர்கள் யாவற்றிலும் உள்ளவைதான். ஒவ்வொரு ஊருக்கும், ஒவ்வொரு வட்டாரத்துக்கும் உரியன என்று சிற்சில சிறப்பியல்புகளும் தனித்தன்மையும் இருக்கும். பொதுத்தன்மைகளும் பல காணப்படும். இவை யாவற்றையும் விட முக்கியமான சங்கதி ஒன்று உண்டு. ஊர்களில் மனிதர்களும் இருக்கிறார்கள். இவர்கள் கூட்டங் கூட்டமாகவும் குழுக்களாகவும் கும்பல்களாகவும் வாழ்கிறார்கள். இனங்களாகவும் குலங்களாகவும் குடிகளாகவும் குறிச்சிகளாகவும் மாகாணங்களாகவும் மாநிலங்களாகவும் நாடுகளாகவும் கண்டங்களாகவும் தம்மை வகைப்படுத்திப் பிரித்துக் கொண்டும் தொகுதிகளாக்கி இணைத்துக் கொண்டும் மனிதர்கள் வாழ்கிறார்கள்.

புலவர் பூங்குன்றனார் காலத்திலே இன்றுள்ள மாதிரியான பிரிவினைகள் இருந்தனவோ. இல்லையோ நாம் அறியோம். ஆனால். ஊர்கள் தோறும் இருந்த மனிதர்கள் அயலூர் மக்களோடு கொண்டிருந்த உறவுகளிலே சில ஒவ்வாமைகளை அந்தப் புலவர் அவதானித்திருக்க வேண்டும். இந்த ஒவ்வாமைகளின் அடியேதுக்கள் எவை எவை என்றும் அவர் யோசித்திருக்க வேண்டும். மனிதர்கள் தம் உறவினர்களுடன் பழகும் அதே முறையில். வேற்றவர்களுடன் பழகுவதில்லை என்ற நிலைமை அவர் நெஞ்சத்தை உறுத்தியிருக்க வேண்டும்.

மனித உறவுகள் பற்றி வேறு விதமாக அவர் சிந்தித்துப் பார்த்திருக்கிறார்.

ஏன் இந்த வேறுபாடுகள்? ஏன் இந்தக் காழ்ப்புணர்ச்சிகள்? ஏன் இந்த அழுக்காறு. ஏன் இந்தப் பொறாமை? ஏன் இந்தப் பூசல்? இவைகள் எல்லாம் இல்லாத ஒரு சுமுகமான சூழலை அமைத்துக் கொள்ள முடியுமானால் எவ்வளவு நல்லது? இப்படி எல்லாம் யோசித்தார். அந்தப் புலவர்.

யோசித்த புலவர் ஒரு கனவு காணுகிறார். அது ஓர் உன்னதமான கனவு. 'புதியதோர் உலகு செய்வோம்' என்று பிற்காலப் புலவர் ஒருவர் கண்ட ஓர் இலட்சம் உலகத்தினைத் தம் மனக்கண்ணாலே. பல்லாண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த அந்தப் புலவர் கண்டு அதனைச் சொல்லோவியம் ஆக்கினார்.

'எல்லா ஊர்களும் எங்களுக்குச் சொந்தமானவை: மனிதர் அனைவரும் எங்கள் உடன் பிறப்புக்கள்'

'ஒன்றே குலம்: மாந்தர் யாவரும் எங்கள் உறவினர்கள்' இலட்சியக் கனவினை எழுத்தோவியமாக்கிய அந்தப் பழைய சிந்தனையாளரைத் தமிழ் அன்பர்களும் அறிஞர்களும் போற்றினார்கள்: போற்றுகிறார்கள்; போற்றுவார்கள்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

'எவ்விறி கண்டரி இஸ் மை ஓன் கண்ட்ரி

எவ்விறி மா(ய்)ன் இஸ் மை கின்ஸ்மன்'

என்று, தமக்கு ஆங்கிலமும் தெரியும் என்று காட்டிக் கொள்ள விருப்பம் உடைய சொற்பொழிவாளர்கள். 'ஆராய்ச்சி' மாநாட்டு மேடைகளிலே ஏறி நின்று தமிழர் சால்பின் மாட்சிமை பற்றிப் பெருமிதத்துடன் முழங்கி வந்தார்கள்.

'ஒரே உலகம்' என்ற குறிக்கோளைக் கண்டறிந்தவன் தமிழன்தான் என்று தலை நிமிர்ந்து எடுத்துரைத்தார்கள்.

அதெல்லாம் அந்தக் காலம்.

இந்தக் காலம் வேறு விதமானது. ஆம் போன வருடம் செப்டெம்பர் மாதம் பதினோராம் தேதிக்குப் பிறகு, உலகம் பற்றி - அதாவது ஒரே உலகக் கோட்பாடு பற்றிப் புத்தம் புதிய பரிமாணங்கள் நாளுக்கு நாள். விநாடிக்கு விநாடி பிறப்பெடுத்துக் கொண்டு இருக்கின்றன. திடீர் ஞானோதயங்கள் புதிய புதிய வேதங்களையும். புதிய புதிய ஆகமங்களையும். புதிய புதிய ஸ்மிருதிகளையும், புதிய புதிய புராணங்களையும். புதிய புதிய இதிகாசங்களையும், தனித் தமிழிலே சொன்னால், புதிய புதிய 'தொன்மங்களையும்' பிறப்பித்தவாறே உள்ளன.

'அப்படி என்ன அற்புதம் நடைபெறுகிறது?' என்று யாராவது கேட்கக் கூடும். அப்படிக் கேட்பவர்களை அஞ்ஞானிகள் என்றுதான் நாங்கள் கருத வேண்டும்.

நடந்தது - நடந்து கொண்டிருப்பது இது தான் : (அரசியல். பொருளியில், அருளியல். மெய்யியல்) விற்பன்னர்களைக் கேட்டால் அவர்கள் சொல்லுவார்கள்: உறுதிபட உரத்துச் சொல்லுவார்கள். எதனை. என்னத்தைச் சொல்லுவார்கள்?

மானுடப் பிறவிக்கே ஈடேற்ற நெறியினைச் சுட்டிக் காட்டும் கட்டாய மூல மந்திரம் எது என்று சொல்லுவார்கள். என்ன அந்த மூலமந்திரம்?

"எல்லாம் உலகமயம்"

ஓம். 'எல்லாம் உலகமயம்' என்பதுதான் இன்றும் இனியும் எல்லாருக்கும் உய்தியையும் ஈடேற்றத்தையும் தரவுள்ள ஒரேயொரு மூலமந்திரம் அப்படித்தானா?

உலகமயம் என்றால் என்ன? அது மாயசாலமா?

மணி - மந்திர - ஔஷதமா? சித்து வித்தையா? சர்வரோக நிவாரணியா?

உலகமயம் என்றால் என்ன?

அது ஒரு தனிப்பிறவி அல்ல. அதற்குப் பல முகங்கள்: பல கோடிக் கரங்கள்: பல்லாயிரம் பல்லுகள்: பல்லாயிரம் நகங்கள்: பல்லாயிரம் ஆயுதங்கள்: கோடிக் கணக்கான கூட்டாளிகள்.

உலகமயமாதலுக்கு எத்தனையோ உடன்பிறப்புக்கள் - எத்தனையோ தோழர்கள்: எத்தனையோ ஆலோசகர்கள்: எத்தனையோ மந்திரி பிரதானிகள்: எத்தனையோ உள்நோக்கங்கள்: எத்தனையோ வெளி வேடங்கள். →

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் ஊடகங்கள் பற்றி (7)

ஜனநாயகம் என்பது பெரிய விடயங்களைப் பற்றியது மட்டுல்ல. பாராளுமன்றத்திலும் அரசியற் கட்சிப் பிரசார மேடைகளிலும் பேசப்படுவனவற்றை விட முக்கியமான விடயங்கள் ஊர்மட்டத்தில் பேசப்படுகின்றன. தேசியப் பத்திரிகைகளால் இவ்வாறான விடயங்களை முழுமையாகக்கையாள இயலாது. முழு நாட்டினதும் அயல் நாடுகளதும் விவகாரங்களையும் பற்றி அறிவதற்கு ஒரு தேசியப் பத்திரிகையால் இயலும். ஆனால் கிராமங்களதும் சிறு நகரங்களதும் செய்திகளாக அது வெளியிடும்

## பிரதேச பத்திரிகைகளின் முக்கியத்துவம்

## மக்களின் விழிப்புணர்வுக்கும் புதிய சிந்தனைகளுக்கும் தளங்களாக வேண்டும்!

தகவல்கள் பரபரப்புச் செய்திகளாக மட்டுமே இருக்கும் என்பதை நாம் அனுபவவாயிலாகக் காணலாம். அல்லது, விற்பனை நோக்கங்கட்காகவோ வேறு வசதிக்காகவோ ஒரு குறிப்பிட்ட பிரதேசம் கூடிய கவனிப்பைப் பெறுவதை நாம் காண முடியும். இதனாலேயே பிரதேசப் பத்திரிகைகட்கு ஒரு முக்கிய இடம் உள்ளது.

அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் இலவசமாக விநியோகிக்கப்படும் உள்ர் வார ஏடுகள் உள்ளன. இவை சில சதுர மைல்கள் பரப்புள்ள பகுதிகளில் உள்ள மக்களுக்காக வெளியிடப்படுகின்றன. தேசிய ஏடுகளில் விளம்பரம் செய்யக் கட்டுபடியாகாத வணிகர்கள் இந்த ஏடுகளைப் பாவிக்கிறார்கள். சிறு விளம்பரங்களும் நிறையவே வெளிவருகின்றன. அதே சமயம். பத்திரிகை விநியோகமாகும் அயலில் பொது மக்களில் நலன் சார்ந்த பல தகவல்கள் இந்த ஏடுகளில் வெளியாகின்றன. உள்ளுராட்சி மன்ற விடயங்கள் பல பிரித்தாளிய உள்ர் ஏடுகளில் இன்றும் விரிவாக விவாதிக்கப்படுகின்றன. உள்ளுராட்சிகளின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு வருகிற நிலைமைகளிலும் இவ்வாறான விவாதங்கள் மக்களுக்குச் சிறிய ஆளுமையை வழங்குகிறது. இந்த ஏடுகளின் அரசியல் அனுதாபம் பொதுவாக முதலாளியக் கட்சிகளுக்கே உரியது என்பதும் உண்மை. ஏனெனில் பணமில்லாமல் பத்திரிகை நடத்த முடியாது என்பதோடு, சிறு முதலாளியக் கட்சிச் சார்பாகவே சிந்திக்கின்றனர். ஆயினும், தேசியப் பத்திரிகைகளை விடக் கூடியளவில் மக்களுடன் இந்த ஏடுகட்கு உறவு உண்டு.

இலங்கையின் வட பிரதேசத்தில் ஒரு பிரதேசச் செய்தி ஏடு நாளேடாகவே வெளி வந்துள்ளது. ஈழகேசரி என்ற பத்திரிகை நின்று போய்விட்டாலும். யாழ்ப்பாணத்தில் பத்திரிகை வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதிலும் உள்ர்ச் செய்திகட்கு முதன்மை கொடுப்பதிலும் ஈழகேசரியின் பங்கு பெரியது. பெரிய பத்திரிகை நிறுவனங்களுக்கு ஈடுகொடுத்து ஈழகேசரி நிலைக்காது போனாலும் இலங்கைப் பத்திரிகை வரலாற்றில் அதற்கு ஒரு முக்கிய இடம் என்றென்றைக்கும் உண்டு. இந்தப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவே தேசியப் பத்திரிகைகள் என்பன வட பிரதேசத்தின் உண்மையான நிலைமைகளை வெளியிடத் தயக்கம் காட்டிய சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பத்திரிகையின் வருகை மக்களால் மிகவும் விரும்பப்பட்டது.

போர்ச் சூழலில் தமிழ்த் தேசியவாத உணர்வுகட்கு அனுதாபமாக நடந்து கொண்ட ஒரே குற்றத்துக்காக ஈழநாடு அரச படைகளது பகைமையைச் சம்பாதித்தது பற்றியும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இந்திய 'அமைதிகாக்கும்'

## வட பிரதேசத்திலிருந்து

படையினரது வருகையின் பின்பு யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களது நிலைமை மேலும் நெருக்கடிக்குள்ளானது. எனினும் இந்தியப் படையினரது வெளியேற்றத்தின் பின்பு விடுதலைப் புலிகளது ஆதிக்கத்தின் கீழும் ஒன்றுக்கு மேற்பட்ட தமிழ் ஏடுகள் வெளிவரக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. வடக்கில் உருவாக்கப்பட்ட பத்திரிகை வாசிப்புப் பழக்கங் காரணமாக காகிதத் தட்டுப்பாட்டின் நடுவிற் கூடச் செய்தி வெளியிடும் வழமை தொடர்ந்தது. பத்திரிகைகளின் எண்ணிக்கை அரச கட்டுப்பாட்டின் கீழ்ச் சரிந்து போனதற்கு பல வேறு காரணங்கள் இருந்தன. எனினும் பொருளாதார. மூலப்பொருள் வளப் பிரச்சினைகளின் பங்கு பெரியது.

இன்று யாழ்ப்பணத்திலிருந்து வலம்புரி. உதயன் ஆகிய ஏடுகட்கும் மேலாக தேசிய நாளேடான தினக்குரல் அங்கு அச்சிடப்படுகிறது. நின்றுபோன ஈழநாடு மீளவும் வெளிவரவுள்ளமை மகிழ்ச்சிக்குரியது. கொழும்பிலிருந்து சில மாதங்கள் முன்பு வெளிவரத் தொடங்கிய சுடரொளி பத்திரிகை, யாழ்ப் பாணத்தில் வெளியாகும் உதயன் பத்திரிகை நிறுவனத்தினதே. அது முழுமையான நாளேடாக வளர நிறையவே செய்ய வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணச் செய்தி ஏடுகளைப் பொறுத்தவரை, போர்ச் சூழலின் முன்பு இருந்து வந்த ஒரு வலிய பத்திரிகைப் பாரம்பரியம் அரசியல் நெருக்கடிகள் காரணமாகச் சிறிது நலிவுற்றுப் போய்விட்டது. இன்று யாழ்ப்பாணத்தின் பிரதேசப் பத்திரிகைகளில் முன்னைய ஈழநாட்டின் களை இருப்பதாகக் கூற முடியாது. தினக்குரலில் செய்திகள் குடா நாட்டின் மற்ற ஏடுகளைவிட அதிகம் இருந்தாலும், பிரதேசச் செய்திகளில் இன்னுங் கூடிய கவனம் அவசியமாக உள்ளது. யாழ்ப்பாண மக்கள் நடுவே செய்திகட்கான தாகம் உள்ளது. பத்திரிகை வாசிப்புப் பழக்கம் வேரூன்றி உள்ளது. இவற்றை வணிக நோக்கில் வற்றச் சுரண்டுகிற ஒரு மனோபாவம் ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கலாகாது. எனவே ஈழநாட்டின் மீள் வரவு பல எதிர்பார்ப்புகளைத் துளிர்விடச் செய்துள்ளது. ஈழநாடு அதை நிறைவு செய்யுமாயின் மற்றைய ஏடுகளது தரத்தின் உயர்வுக்கு அது நிச்சயமாகக் கைகொடுக்கும் என்பது எனது நம்பிக்கை.

யாழ்ப்பாணத்தில் மட்டுமே இருந்த செய்தி ஏட்டுப் பாரம்பரியம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த வன்னியிலும் தொடர்ந்தது. இந்த ஏடுகள் யாவும் விடுதலை இயக்கப் பத்திரிகைகள் என்ற தளத்திலேயே கருதப்பட்டு வந்துள்ளன.

மறுபுறம், மட்டக்களப்பிலிருந்து இரண்டு ஆண்டுகள் முன்பிருந்து வெளியாகி வந்த தினக்கதிர், கிழக்கிலங்கையின் செய்தித்துறை வரலாற்றில் முக்கியமான ஒரு பதிவாகும்.

ஈழகேசரி, ஈழநாடு ஆகிய ஏடுகளது சுயாதீனமான பத்திரிகைப் பாரம்பரியத்தில் தொடர முனைந்த தினக்கதிர், அரசியல் ஆதிக்கச் சக்திகளால் விரும்பப்படாது போனதில் அதிசயம் இல்லை. பல வேறு நெருக்குவாரங்களின் நடுவே, குறைவான வசதிகளின் நடுவிலும் பத்திரிகை ஊழியர்களது தளராத உற்சாகத்தின் உறுதி கொண்டு வெளி வந்த இந்தப் பத்திரிகையின் அலுவலகம் ஓகஸ்ட் மாதம் அடித்து நொறுக்கப்பட்டு அதன் ஆசிரியரும் தாக்கப்பட்ட நிகழ்வு தமிழ்ச் செய்திப் பத்திரிகை உலகின் எதிர்காலம் பற்றி அம்சங்களைக் கூட்டுகிறது.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு யார் பொறுப்பெனினும் அவர்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவர்களே. யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகள் செழிக்கும் போது மட்டக்களப்பு மண்ணில் வரலாறு படைத்த ஒரு பொறுப்பான நாளேடு அழிக்கப்பட்டமை வெகுசன மட்டத்தில் சனநாயகத்துக்கு விழுந்த ஒரு பலமான அடி என்றே கூற வேண்டும்.

### ஈழநாடு
### உதயன்
### வலம்புரி
### தினக்குரல்
### ஈழநாதம்

தமிழ்ப் பிரதேசங்களில் தேசிய நாளேட்டுக்கும் மேலாகப் பிரதேச ஏடுகட்கு வரவேற்பும் வாய்ப்பும் உண்டு என்பது நடைமுறையில் நிறுவப்பட்ட விடயம். இதை ஆரோக்கியமான திசையில் வளர்த்தெடுக்க முடியுமாயின். தேசிய நாளேடுகளின் போக்கிலும் சில நல்ல மாற்றங்கள் ஏற்படலாம்.

இருப்பினும் இப் பிரதேச ஏடுகள் முற்றிலும் ஜனநாயகமாகவும் மக்கள் சார்பாகவும் கருத்துக்களைத் தாங்கி வருபவை என்ற முடிவுக்கும் வந்து விடக் கூடாது. குறிப்பாக வடபிரதேசத்தின் மூன்று அடுத்து நான்காவது பத்திரிகையும் எந்தளவுக்கு யாழ்ப்பாண பழமைவாதக் கருத்தியலுக்கு மாறான எழுத்துக்களுக்கு இடமளிக்கும் என்பது இன்றும் கேள்விக்குரியதேயாகும். தமிழ் இன விடுதலைப் போராட்டத்தின் நடுவிலும் பழமைவாதம் பேணப்படுவதை இப் பத்திரிகைகள் கண்டும் காணாதும் இருந்து வருகின்றமை விசனத்திற்குரியதாகும். விமர்சகக் கலாசாரத்தை ஊக்குவிப்பதில் உள்ள அக்கறையும் நுணுக்க சிந்தனையும் சமூக அக்கறை கொண்ட முற்போக்கு கருத்துகளைப் பரப்புவதில் அப்பத்திரிகைகள் பின்னடிப்பையே காட்டுகின்றன.

அரசியலில் கூட தொடரும் தமிழ் ஆதிக்க அரசியலுடன் இணைந்து செல்வதையே வட பிரதேசப் பத்திரிகைகள் பிரதான போக்காகக் கொண்டுள்ளன. பணவலிமை, அந்தஸ்து, சாதிய நிலை போன்றவற்றை ஆசிரிய பீடங்கள் கவனித்து எழுதுவதும் எழுதியனுப்பியவற்றுக்குரிய இடமளிப்பதைத் தவிர்ப்பதிலும் கவனமாகவே இருந்து வருகின்றன.

உதாரணமாக வியாபாரத்தில் மூழ்கி இருந்த ஒருவரை தமிழ் மக்கள் நடுவே அரசியல் கதாநாயகன் ஆக்கி. ஐம்பத்திநாலு வருடங்களுக்குப் பின் யூஎன்.பி. கட்சிக்கு ஒரு ஆசனத்தை தமிழ் மக்கள் மத்தியில் கடந்த இரண்டு தேர்தல்களில் பெற்றுக் கொடுப்பதில் உதயன் பத்திரிகை முன் நின்றமை ஒளிவு மறைவு அல்ல. இதனை ஒரு தமிழ் மக்கள் சார்பான செயல் என்று எவராவது கூற முடியுமா?

எனவே பிரதேசப் பத்திரிகைகளுக்கு உரிய முக்கியத்துவத்தைப் பயன்படுத்தி பரந்த சமூக நோக்கும் ஆழமான சமூக அக்கறையோடும் பயனுள்ள கருத்துக்கள் வெளிவருமாயின் தமிழ் மக்களின் விழிப்புணர்வுக்கும் புதிய சிந்தனை வளர்ச்சிக்கும் தளங்களாக அமைய முடியும். இல்லாதுவிடின் அரைத்த மாவையே அரைத்து வடபிரதேச பழமைவாதத்திற்கும் ஆதிக்க அரசியலுக்கும் வலுச் சேர்த்து சமூக வளர்ச்சிக்கு குறுக்கே நிற்பதுடன் வர்த்தக ரீதியில் பணம் சேர்ப்பதாக மட்டுமே அமைந்து கொள்ளும்.

---

"சர்வதேசம்" என்று ஒரு பதம். இதுவும் "உலகமயம்" போலச் சிக்கலானதொரு பதம் தான்.

சர்வதேசம் இப்படிக் கருதுகிறது: சர்வதேசம் இப்படிச் சொல்கிறது: சர்வதேசம் இப்படித் திட்டமிடுகிறது. சர்வதேசம் இப்படியெல்லாம் செயலாற்றும். இப்படி எல்லம் செய்தி ஊடகங்கள் முழங்குகின்றன.

உலகமயமாகிவிட்ட இன்றைய சூழலில். நாகரிகமடைந்த மனிதர்கள் இப்படி இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும். மனிதப் பண்பு, மனித உரிமை, மனித முன்னேற்றம் என்றெல்லம் கருத்துகள் விருத்தியாக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு விருத்தியாக்கப்படும் கருத்துக்களின் உள்ளும் அவற்றுக்கு அப்பாலும் இரகசிய உள்நோக்கங்களும் புதைந்திருக்கக் கூடும். ஊடுருவலுக்கும். உள்ளறுப்புக்கும் வழி வகுத்திடும் சதிகளும் இருக்கக் கூடும். இவற்றை எல்லாம் உள் நுழைந்து பார்க்கத் தெரியாதவர்கள் இலேசில் ஏமாந்து ஆபத்துக்களில் மாட்டிக் கொள்ளவும் நேரலாம்.

இது இவ்வாறாய் இருக்க "உலகமயமாதல்"கலாசாரச் சீரழிவுக்குக் காலாக உள்ளது என்றும் சிலர் சொல்லுகிறார்கள். "இல்லை. இல்லை உலகமயமாதல் தான் கலாசாரத்தின் உச்சத்துக்கே மாந்தர்களை உயர்த்தி வைக்கப் போகிறது" என்று வேறு சிலர் பரவசம் கொள்ளுகிறார்கள்.

"கலாசாரம்" என்று சொல்லப்படுவது யாது? அதன் பரிமாணங்கள் எவை எவை?

இவ்வாறு பல கேள்விகள் நம் முன் கிளம்புகின்றன.

உலகமயம், சர்வதேசம். கலாசாரம் ஆகிய ஒவ்வொன்று பற்றியும் விசாரித்தறிய வேண்டியவை பல உள்ளன. அந்த எண்ணக்கருக்களின் உள்ளடக்கங்களைப் படிப்படியாக விசாரித்தறிய முயல்வோம்.

அந்த விதமான விசாரணைதான். விடய விளக்கத்துக்கும் தெளிவான கருத்தியலுக்கும் நம்மை இட்டுச் செல்லும்.

---

# பெல்ஜியத்தில் மார்க்ஸியம் பயிலும் மாணவர்கள்

(பெல்ஜியத்திலிருந்து புதிய பூமி நிருபர்)

பெல்ஜியத்திற்கும் மார்க்ஸிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. கார்ல் மாக்ஸ் அங்கு நடந்த புதிய சமுதாயம் உருவாக்க நினைத்த சமதர்ம வாதிகளின் கூட்டங்களில் பங்குபற்றியுள்ளார். சொற்பொழிவாற்றியுள்ளார். உலகில் முதல் தொழிற்புரட்சி நடந்த நாடுகளில் பெல்ஜியமும் ஒன்று. ஆகவே பாரம்பரிய தொழிலாளர் வர்க்க கலாச்சாரம் இன்றும் மங்கிப் போனாலும், மறையாமல் உள்ளது. அதற்கு காரணம் பலமான புரட்சிகர கட்சியான பெல்ஜியம் தொழிலாளர் கட்சி உயிர்ப்புடன் இருந்து வருவது தான். பெல்ஜிய தொழிலாளர் கட்சி 1968ம் ஆண்டு ஐரோப்பாவை குலுக்கிய மாணவர் புரட்சியில் பங்கு பற்றியவர்களால் மார்க்ஸிஸ-லெனினிச-மாவோ சிந்தனைகளின் அடிப்படையில் கட்டப்பட்டது. புரட்சித் தீ அணையாமல் அடுத்த தலைமுறையிடம் ஒப்படைக்கும் பொருட்டு வருடந்தோறும் பல நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. அவற்றில் ஒன்று மார்க்ஸிஸம் கற்றுத் தெளிவதற்கான கோடை கால மார்க்ஸிஸ பல்கலைக்கழகம். கோடைக்கால பாடசாலை விடுமுறைக்கு வட ஐரோப்பிய நகரத்தெருக்கள் வெறிச் சோடியிருக்கும். அதற்குப் பதிலாக தென் ஐரோப்பிய கடற்கரைகள் நிரம்பி வழியும். அவ்வாறு சென்று உல்லாசமாக பொழுதைப் போக்காமல். மார்க்ஸிஸ-லெனினிசம் என்றால் என்னவென்பதை கற்றுக் கொள்வதற்காக நூற்றுக் கணக்கான இளைஞர்கள் கூடுவது ஆச்சரியமல்லவா? கற்றுக் கொள்ள வருபவர்களில் பெரும்பாலானோர் உயர் கல்வி பெற்றவராகையால் பல்கலைக்கழக மாதிரி பின்பற்றப்படுகின்றது. கொடுக்கப்பட்ட நூல்களில் குறிப்பிட்ட பந்தியை முன்கூட்டியே வாசித்தல். பின்னர் சிறு சிறு குழுக்களாக பிரிக்கப்பட்ட வகுப்புகளில் வரும் விரிவுரையாளருடன் (சிலர் உண்மையிலேயே பல்கலைக்கழக பேராசிரியராக தொழில் புரிபவர்கள்) கலந்துரையாடல். தெரியாததை அறிந்து கொள்ளல், சக மாணவருடன் விவாதம் செய்தல் இவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டது. சிலர் உணவு வேளையின் போதும். மாலை நேரம் பியர் அருந்திக் கொண்டும் அரசியல் விவாதங்களில் ஈடுபட்டதை காண முடிந்தது.

பொருளாதாரம் (மூலதனத்தை வாசித்தல்) , ஏகாதிபத்தியமும் போரும், பாட்டாளி வர்க்க கட்சி அமைத்தல் போன்ற தலைப்புகளின் கீழ் பாடத் திட்டங்கள் அமைந்திருந்தன. இவை ஆரம்பதரம், உயர்தரம் என பிரிக்கப்பட்டிருந்தாலும் அவரவர் முன்னறிவைப் பொறுத்து பாடங்களை பின்பற்றினர். மேற்கத்தய நாடுகளில் ஒரு உண்மையான மாற்றுக் கட்சி பலவீனமாக இருக்கும் வரையில் அரசாங்கம் கண்டு கொள்ளாது. ஆனால் அதன் செயல்கள் அதிகரித்து ஆதரவு பெருகும் போது அடக்கத் தொடங்கும். மாக்ஸிய பல்கலைக்கழகத்தை தனது அதிகாரத்திற்குட்பட்ட அரசுப் பாடசாலைகளில் நடத்த விடாது கல்வியமைச்சு பார்த்துக் கொண்டது.

இது போன்ற இன்னொரு பிரச்சனை சிறப்பு விரிவுரையாளர் மீது வந்தது. பிலிப்பைன்ஸ் கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும். நெதர்லாந்தில் அரசியல் அகதியாக வசிப்பவருமான யோசே மரியா சிசோன் ஏகாதிபத்தியமும் போரும் தொடர்பான பாடங்களை நடத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் அவரின் கட்சி மீது அமெரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப்பதால் சிசோனின் விரிவுரை இரத்துச் செய்யப்பட்டது. சிசோன் பத்து வருடங்களுக்கு மேலாக நெதர்லாந்தில் வசித்த போதும், அமெரிக்க அழுத்தம் காரண மாக நெதர்லாந்து அரசு அவரை அகதியாக அங்கீகரிக்க மறுத்து வருகின்றது. பிலிப்பைன்ஸ் கொம்யூனிஸ்ட் கட்சியின் இராணுவப் பிரிவு புதிய மக்கள் படை அமெரிக் காவின் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதால் நிலைமை இன்னும் மோசமாகியுள்ளது. கட்சியின் வங்கிக் கணக்குகளை முடக்கும்படி அமெரிக்கா நெதர்லாந்து அரசைக் கேட்டுள்ளது.

ஐரோப்பாவில் தற்போது தீவிர வலது சாரிக் கலாச்சாரம் பரவிக் கொண்டிருக்கையில், மறுபக்கத்தில் எதிர்ப்புச் சக்தியாக புதிய மாக்ஸிய இளைஞர்கள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை பெல்ஜியத்தில் இடம் பெற்ற மாக்ஸிய லெனினிச ஒன்று கூடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. இந்தக் கோடை கால மார்க்ஸிய பல்கலைக்கழகத்தில் பெல்ஜிய ஆர்வலர்களைத் தவிர நெதர்லாந்து. பிரான்ஸ். பிரிட்டன் ஆகிய நாடுகளில் இருந்தும் பலர் கலந்து கொண்டனர். இவர்களிடையே கணிசமான அளவு ஆசிய. ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு புலம் பெயர்ந்து குடியேறியவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்க அம்சம்.

www.padippakam.com



# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் (8)

~ செண்பகன் ~

காதலும் வீரமும் போனால் தமிழுக்கு வேறுகதி இல்லை என்றாகி விட்டது. உழைப்பைப் பற்றிச் சிந்திப்பதற்கு வள்ளுவரிலும் பாரதியிலும் மேடைப் பிரசங்கத்துக்கு மேற்கோள்களாகப் பயன்படுத்தும் வரிகளை உதிர்த்து விட்டால் உள்ளத்தில் வேறு எதுவும் மிஞ்சப் போவதில்லை.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்வார்' இக்குறள் இரண்டாயிர மாண்டுப் புளித்துப்போன வாசகம் போலாகிவிட்டது. இதை நம்பி கடன்பட்டு வட்டி கொடுத்து இலங்கை எனும் கிராமங்கள் சூழ்ந்த விவசாய நாட்டில் உழைத்த விவசாயிகள் உருக்குலைந்தும் அநேகர் தற்கொலை செய்து கொண்டமையும் சமகாலச் சான்றுகளாகும். இன்று விவசாயிகளே தொழுதுண்டு பின்செல்லும் அவலம் ஏற்பட்டுவிட்டது. கிராமங்கள் வறுமையில் வாடுகின்றன. விவசாயக் காணிகள் கையிழக்கப்படுகின்றன.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில் உண்டு கழிப்போரை நிந்தனை செய்வோம்'

என்பது பாரதியின் சங்கநாதமாகும். எனினும் உற்பத்தியில் உழைப்பில் ஈடுபடாமல் மூலதனம் உள்ளவனே உலகை ஆளும் வல்லமை பெற்றுள்ளான். அவன்தாள் சரணம் எனப் பணிந்துள்ளோம்.

'கடவுள் எனும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி! விவசாயி!!'

என்ற பாடல் கண்ணதாசன் எழுதி ரி.எம். சௌந்தர்ராஜன் பாடி எம்.ஜி.ஆர் நடித்த பிறகும் கூட தமிழகமெங்கும் விவசாயி தோளில் சால்வையை எடுத்து கூனிக்குறுகி நிற்பதையே காணமுடிகின்றது.

## தமிழர் போரசில் விவசாயிகள் தமிழர்களாகக் கணிக்கப்படுவார்களா?

எந்தவொரு அரச, தனியார் அலுவலகத்திலோ அல்லது எந்தவொரு தமிழ்ப் பெருமகனார் முன்னிலையிலோ சென்று "நான்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு. விவசாயி வந்திருக்கிறேன்" எனக் கட்டியம் கூறி அறிமுகப் படுத்தினால் எவரும் இருக்கை கொடுத்து கௌரவிப்பார்களா?

ஒன்றும் வேண்டாம். செத்தவீடு, கலியாண வீடுகளில் ஒரு விவசாயி சென்று அங்கு வெட்டிப் பேச்சு பேசிக் கொண்டிருக்கும் விளலம்பிகளிடம் தன்னை விவசாயி என வெளிப்படுத்தினால் ஏதேனும் ஒரு கணிப்புக் கொடுத்துத்தான் எவரேனும் கதைப்பார்களா? அங்கே தன்னும் அந்த விவசாயியின் வாய்ச்சொல்தான் எடுபடுமா?

விவசாயிகளின் வாழ்வும் இருப்பும் இன்று அச்சுறுத்தப்படுகின்றன. நிச்சயிக்கமுடியாத நிலைமையில் வறுமையில் சுழல்வதே அவரது விதியாகிவிட்டது. கிராமங்களில் நோயும் பிணியுமே அவர்களின் முதுசொம் ஆகிவிட்டன. நகரங்களில் உற்பத்திசாரா பொருளாதாரச் சூதாட்டமே செல்வத்தை ஒரு சிலரின் கரங்களுக்கு உரித்தாக்கிக் கொண்டுள்ளன.

இதற்கு இலங்கையை இரையாக்கிய பெருமை ஜே.ஆர்.முதல் இன்றைய சகல தலைவர்களையும் சாரும். இதில் எவரும் சிங்கள-தமிழ் வேறுபாட்டுடன் தனித்துச் செயற்படவில்லை. தமிழ்த்தேசியமே இதில் முதல் பலியானது. இலங்கையைச் சிங்கப்பூராக மாற்றும் பணி எமது சிந்தையில் வியாபித்து விட்டது.

'எல்லாம் சிவமயம்' என்று வாழ்ந்த சமூகத்தில் இன்று "எல்லாம் உலக மயம்" ஆகிவிட்டது. எங்கள் உற்பத்தி உலகமெங்கும் செல்ல முடியாது. எல்லா உலகமும் உற்பத்தியாகும் கிழங்கு வெங்காயம் முதல் முட்டை, மீன்வரை இங்கு இறக்குமதியாகி எங்கள் விவசாயிகளையும் மீனவர்களையும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

நகரமானுடரின் நுகர்வுப் பண்பாட்டுத் தேவையே முதன்மைப் படுத்தப்படுகின்றது. உலக மானுட ஒட்டகம் உள்நுழைய அனுமதி கிடைத்துவிட்டது. இலங்கை சிங்கப்பூராகாவிடினும் தமிழீழம் சிங்கப்பூராக மாறும் என்ற சன்னதம் தொடங்கியுள்ளது.

உலகெலாம் புலம்பெயர்ந்து வாழும் தமிழரின் வழித்தோன்றல்கள் தமிழ் பேசாதுமறந்து விடினும் உலகத் தமிழர் என்று உணரப்படுவார்கள். உள்ரில் வாழும் விவசாயி தமிழ்தவிர வேறு மொழி தெரியாவிடினும் வேறு ஊர்களுக்கு ஓடாது தனது குடிலிலும் கூரை தாவாரத்திலும் குந்தியிருந்தாலும் தமிழர் ஆகார்.

தமிழ் என்பது மொழி. அது தமிழருக்கு அடையாளம் ஆகாது. "தமிழன் என்று சொல்லடா-தலை நிமிர்ந்து நில்லடா" என்பது ஆதிக்கம் தொடர்பானது. தமிழ் என்பது வெறும்மொழியானால் தமிழன் என்பது ஓர் சமூகத் தகுதியாகும்.

அத்தகுதிப் பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஆசிரியர்கள். மாணவர்கள். எழுதுவினைஞர். அதிகாரிகள். வர்த்தகர்கள் மட்டுமே உள்ளடக்கம். ஏனைய தொழிலாளர். விவசாயிகள். பெண்கள். 'தமிழன்' என்ற தகுதி பெறார்.

தமிழ்த் தேசிய வரலாற்றில் விவசாயிகளுக்கென்று சங்கங்கள் அமைத்த வரலாறு கிடையாது. தமிழர்கள் ஒரு பெரு இனம். அவற்றினுள் இத்தகைய பேதங்கள் அவசியமில்லை. தொழிலாளர். விவசாயிகள். பெண்கள் அனைவரும் தமிழர் என்பதில் கரைந்து விடுகின்றனர். அவர்களின் தனித்துவம் அங்கீகரிக்கப்படுவதில்லை. மாறாக தமிழ் மேலாதிக்கத்தினுள் அவர்கள் உள்ளடங்கி உலர்ந்து விடுகின்றனர்.

வடகிழக்கில் தொழில் நியாயமன்றுகள் இல்லையே? ஏன் என்று விசாரித்த போது தொழிலாளி-முதலாளி பேதமற்ற சமூகமே தமிழ்ச்சமூகம் என்ற பதில் எவ்வளவு ஆதிக்க மனோபாவத்தின் இயல்பான வெளிப்பாடு என்பதை புரிந்து கொள்ளல் ஒன்றும் கடினமல்ல.

இத்தமிழ்த் தேசிய வரலாற்றுக்கும் கண்ணோட்டத்துக்குமப்பால் தோழர் நா.சண்முகதாசன் தலைமையில் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் 1970களில் பல விவசாய சங்கங்கள் உருவாக்கப்பட்டு விவசாயிகள் என்போர் உதிரிகளல்ல. ஒன்றுபட்டுச் செயற்படவேண்டியோர் என்ற உணர்வு எழுச்சி பெற்றது. விஸ்வமடு, கிளிநொச்சி போன்ற விவசாயப் பிரதேசங்களில் விவசாயச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

விவசாயிகளுடைய சங்கங்கள் இணைக்கப்பட்டு விவசாயிகள் சம்மேளனம் அமைக்கப்பட்டு அவர்கள் மத்தியில் கருத்துக்கள் பரிமாறப்பட்டதுடன் அனுபவங்கள் பகிரப்பட்டன. தேசிய பொருளாதாரக் கூட்டமைப்பில் விவசாயிகளின் பங்கு உணரப்பட்டது. இத்தகைய விவசாயிகள் மாநாடு அனுராதபுரம் உட்பட பல சிங்களக் கிராமங்களிலும் நடத்தப்பட்டன.

எந்த ஒரு தேசியப் பிரச்சினையும் சாராம்சத்தில் நிலப்பிரச்சினையேயாகும். ஆனால் நிலத்துடன் உறவு பூண்ட விவசாயியைத் தவிர்த்து தமிழ்த்தேசியம் நிலைக்க முடியாது.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் கல்லோயா முதல் வெலிஓயா (மணலாறு) வரை யூஎன்பி. அரசு திட்டமிட்டுச் செயலாற்றி விவசாயப் பிரதேசங்களைக் கபளீகரம் செய்த போது தமிழ்த்தலைவர்கள் யூஎன்பி. யுடன் சங்கமமாகிக் கூடிக் குலவினர். அதற்கெதிராக போராட்டம் தொடங்கப்படவில்லை. ஏனெனில் அதில் பாதிக்கப்படுபவர்கள் விவசாயிகளே தவிர தமிழர்களல்லவே!

அம்பாறை மாவட்டந்தான் தமிழ்த் தேசியப்பரப்பில் நெல் செழித்து விளையும் பெருநிலப்பரப்பு. ஆனால் அப்பிரதேசத்தின் அடையாளத்துக்கும் அங்கீகாரத்துக்கும் தமிழ்த் தேசியத் தலைமைகள் இரண்டாம் பட்ச அவதானிப்பையே செலுத்தின. அங்குவாழும் முஸ்லிம்-தமிழ் விவசாயிகளின் பிரச்சினையை பொதுமைப்படுத்திப் பார்த்து அணுகித் தீர்ப்பதற்குப் பதிலாக துவேசத்தைத் தூண்டி அவ்வினஞ்சார் மக்களின் பண்பாட்டைச் சிதைக்கும் முயற்சியிலேயே இறங்கினர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் முதல் கிழக்குப் பல்கலைக்கழகங்கள் வரை எதிலும் விவசாயத்தையோ மீன்பிடித் தொழிலையோ முதன்மைப்படுத்திக் கல்விப்பீடங்கள் இதுவரை உருவாக்கப்படவில்லை. உருவாக்கப்படவேண்டிய தேவையோ-அவசியமோ தமிழரின் அரசியலுக்கு வேண்டியதல்ல. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட நெற்காணித் திருத்தச் சட்டத்தினை தமிழ்த் தலைவர்கள் பாராளுமன்றத்தில் எதிர்த்து வாக்களித்தனர்.

உழுபவர்க்கே நிலம் சொந்தம் என்று கூட அச்சட்டம் சொல்லவில்லை. குத்தகை விவசாயிகளை வயல் நிலங்களிலிருந்து அவர்களது விருப்பத்துக்கு விரோதமாக வெளியேற்ற முடியாது என்ற அச்சட்டத்தையே தமிழ்த் தலைவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

மலையகத் தொழிலாளர்களை வடக்கில் வந்து குடியேறும்படி தமிழர் தலைமைக் கோரியது. வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழ் மக்கள்ளைச் சென்று எல்லைப்பிரதேசங்களைப் பாதுகாக்கும்படி தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆவரங்கால் மாநாடு முழங்கியது. ஆனால் அங்கு சென்று வாழமுயன்ற விவசாய மக்களைத் தமிழர்களாக கௌரவங் கொடுப்பதற்குப் பதிலாக கூலிகளாகவும், தோட்டக்காட்டாராகவுமே மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தமிழாதிக்க சக்திகளால் இழிவு செய்யப்பட்டனர்.

அபிவிருத்தித் திட்டங்களும் புணர்வாழ்வும் இடிந்த கட்டிடங்களைக் கொண்ட நகரஞ்சார் பகுதிகளுக்கேயன்றி வயலும் வயல்சார்ந்த நிலங்களுமான கிராமங்களுக்குக் கிடையாது.

அபிவிருத்திப் பங்காளிகளாகிய தமிழர் தலைமை, சிங்கள பேரினவாத யூஎன்.பி. அரசுடன் உறவு கொண்டாலும் குளங்களைக் கட்டவோ வயல்களைத் திருத்தவோ-வறுமைக் கோட்டின் கீழ் வாழும் விவசாயிகளின் வீடுகளில் உலைகள் கொதிக்கவோ உதவ மாட்டார்கள் என்பது நாம் தெளிவாக அறிந்ததே!

உழவர் திருநாளில் யாழ் வர்த்தகப் பெருமகன் வீட்டில் தமிழ் அமைச்சர் பொங்கி மகிழ்ந்து தொலைக்காட்சிக்குப் போஸ் கொடுத்ததே பெரும் புண்ணியம்.

பாவப்பட்ட விவசாயிகள் தமிழர்களாக அங்கீகரிக்கப்படும் நாள் வருமா? நம்பியிருக்கலாம் எதுவுமே நடக்காது.



# மாக்ஸியத்தின் போதாமைகள் பற்றி

## வர்க்கப் போராட்டம் ஓய்ந்து விட்டதா?

மாக்ஸியம் மனித நாகரிகத்தின் வரலாற்றை வர்க்கப் போராட்டத்தின் வரலாறாகவே விளக்கியுள்ளது. வர்க்கங்களும் வர்க்கங்களிடையிலான முரண்பாடுகளும் பற்றி மாக்ஸ் சொல்ல முன்னமே பிறர் சொல்லியிருக்கிறார்கள் என மாக்ஸ் குறிப்பிட்டுள்ளார். எனினும் மாக்ஸிக்கு முன்னர் யாருமே உலக வரலாறு வர்க்கப் போராட்டத்தினூடாகவே விருத்தி பெற்றது என்று விளக்கவில்லை. இதன் மூலம் உலக வரலாற்றைக் கற்கும் முறையிலும் விளங்கிக் கொள்ளும் முறையிலும் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. முதலாளிச் சார்பான ஆய்வாளர்களும் காலப் போக்கில் இந்த அணுகுமுறையை ஏற்றனர். வரலாறு தனி மனிதச் சாதனைகளின் பதிவாக இல்லாமல் சமூகங்களுக்கு உள்ளும் வெளியிலும் மனிதக் குழுமங்களின் செயற்பாடுகளின் விளைவான நிகழ்வுகளின் பதிவாக அடையாளங் காணப்பட்டது.

தனி மனிதர்களது பங்களிப்பு. குறிப்பிட்ட சமூகச்சூழலில் அவர்கள் எந்தச் சமூகப் பிரிவின் நலன்கட்காகச் செயற்பட்டார்களோ அவற்றின் அடிப்படையிலே விளங்கிக் கொள்ளப் பயன்பட்டது. தனிமனிதர்களின் அடையாளத்தை விட. அவர்களது செயற்பாட்டுக்குக் காரணமாக இருந்த சமூகச் சக்திகளது அடையாளம் முதன்மை பெற்றது. இந்த அணுகுமுறை. புராணக் கற்பனைகளால் மூடுண்டு கிடந்த பழைய சமுதாய வரலாறுகளை அறியவும் உதவியது.

பழைய வரலாற்றின் அறிவும் வரலாற்றுப் போக்குப் பற்றிய அறிவும் இவ்வாறு விஞ்ஞான முறையில் அதாவது இயங்கியல் பொருள் முதல்வாத அடிப்படையில் விளங்கிக் கொள்ள முடிந்தது. இதனாலேயே மாக்ஸியம் ஒரு சமூக ஆய்வுக்கான அணுகுமுறையை வழங்கியதோடு நில்லாமல் சமூக மாற்றத்திற்கான போராட்ட முறையையும் முன் வைக்கவும் வல்லதாயிற்று. பாட்டாளி வர்க்கமே மனிதரை முழுமையாக விடுதலை செய்யக் கூடிய வரலாற்றுச் சக்தி என்ற மாக்ஸின் முடிவு இன்றும் அடிப்படையிற் சரியானது. எனினும். அது விறைப்பான முறையில் பயன்படுத்தப்படும் போது தவறான முடிவுகளுக்கு நம்மை இட்டுச் செல்கிறது. பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைப் பிடிக்கும் வரை வேறு சமூக ஒடுக்குமுறைக்குள்ளான எல்லாரும் சும்மா காத்திருக்க வேண்டும் என்பது வரட்டு மாக்ஸியம். இது நேர்மையற்றவர்களால் முன்வைக்கப்படுவதாக இருக்கலாம். அல்லது வெறும் ஏட்டுச் சுரைக்காய்களால் முன் வைக்கப்படுவதாக இருக்கலாம். இதனாலேயே வரட்டு மாக்ஸியம் மலத்தினும் இழிவானது என்று மாஓசேதுங் அழுத்தந் திருத்தமாகக் கூறியிருக்கிறார். இதுவே மனித இன விடுதலைக்காக மாக்ஸியத்தின் வழியிற் போராடி வென்ற ஒவ்வொரு விடுதலை இயக்கத்தினது அனுபவமும் ஆகும். எனினும் எந்த நிலையிலும் இந்தப் போராளிகளும் மாக்ஸியச் சிந்தனையாளர்களும் வர்க்கப் போராட்டத்தையோ பாட்டாளி வர்க்கத் தலைமையையோ மறுக்கவில்லை.

பாட்டாளி வர்க்கம் தன்னைத் தூக்கி எறியும் அபாயத்தைத் தடுக்க முதலாளியம் பல்வேறு உபாயங்களைக் கையாளுகின்றது. தனது நாட்டின் தொழிலாளர்களது போராட்ட உணர்வைத் தணிக்கும் விதமாக வேறு நாடுகளின் உழைப்பாளர்களை வற்றச் சுரண்டுகிறது. அதன் மூலம் தனது நாட்டின் தொழிலாளர்களது பொருளாதாரத் தேவைகளை ஓரளவுக்கு நிறைவு செய்கிறது. அதேவேளை அதன் சுரண்டுதல் இயல்பு தனி மனிதர்களது தேவைகளையும் நுகர்வையும் மேலும் மேலும் அதிகரிக்கச் செய்கிறது. பெரு முதலாளிய நாடு தன் கொலனி அல்ல நவகொலனியில் எதிர்ப்பைச் சந்திக்கும் போது அல்லது பிற முதலாளிகளுடனான போட்டியின் விளைவாகத் தனது பொருளாதார ஆதிக்கத்தை இழக்கும் போது உள்நாட்டு நெருக்கடி உக்கிரமாகிறது. சுரண்டப்படும் நாட்டின் வறுமையும் சுரண்டுகிற முதலாளிகளது நாட்டின் பொருளாதாரத்துக்குப் பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றன. எனவே முதலாளியத்தால் தனது நாட்டின் தொழிலாளருடன் மோதுவதைப் பிற்போட முடியுமே ஒழியத் தவிர்க்க முடியாது. இது அண்மைக் காலத்தில் ஐரோப்பாவில் காணப்பட்ட விடயம்.

எனவே ஏகாதிபத்தியத்திற்கு எதிரான எந்த ஒரு போராட்டமும் ஏகாதிபத்தியத்துக்கும் அதன் மண்ணிலுள்ள தொழிலாளர்கட்குமிடையிலான முரண்பாட்டை மேலும் கூர்மையாக்குகிறது. இது ஒரு புறமிருக்க, நவீன தொழில்நுட்ப விருத்தி. கணனி, தொடர்பாடல் துறைகளின் வளர்ச்சி போன்றன, முதலாளிய உற்பத்தி செயற்படுகிற விதத்தையும் மாற்றியுள்ளது. இதை வைத்து. நவீன உற்பத்திக்கும் உடல் உழைப்புக்கும் உறவேயில்லை என்ற விதமான வாதங்கள் திட்டமிட்டு ஊக்குவிக்கப்படுகின்றன. குறிப்பாக, வர்க்கப் போராட்டத்தை மறுக்க முனைப்பாக நிற்கிறவர்கள் சில பின் நவீனத்துவ வாதிகளின் வியாக்கியானங்களை விரும்புகிறார்கள்.

குறிப்பாக 1980களில் அதிகம் விளம்பரப்படுத்தப்பட்ட பிரான்சுவா லியோதார் என்ற பின் நவீனத்துவகாரர். முதலாளிய முறை உடல் உழைப்பு என்ற தளத்திினின்று உயர்ந்து தகவல் மீதான ஆளுமை என்ற தளத்துக்கு இடம்பெயர்ந்து விட்டது என்று சொன்னதை ஒரு மந்திரவாக்குப் போல திரும்பத் திரும்பச் சொன்ன சில இந்திய தலித்தியர்களும் பிற பின் நவீனத்துவ உபாசகர்களும் இருந்துள்ளனர்.

உண்மையில் நடந்தது ஏதென்றால் ஒருபுறம் நவீன தொழில்நுட்பம் உழைப்பின் தன்மையை மாற்றிவிட்டது. இது இரண்டு நூற்றாண்டு காலமாகத் துரித வேகத்தில் நடந்து வந்த ஒரு மாற்றத்தின் பகுதியேயொழிய முற்றிலும் புதிய ஒரு விடயமல்ல. மறுபுறம் சுரண்டப்படும் மூன்றாமுலக நாடுகளில் இன்னமும் உடல் உழைப்பின் தேவை குறையவில்லை. எனவே மனித உழைப்பின் வடிவத்தில் ஏற்பட்ட மாற்றத்தையும் உழைப்பு எவ்வாறு பூகோள அடிப்படையில் வேறுபடுகிறது என்பதையும் கவனியாமல் பழைய உற்பத்தி முறையுடன் நேரடியாக ஒப்பிடுவது தவறான முடிவுகட்கே இட்டுச் செல்லும்.

சிலர் வலிந்து இந்த விதமான முடிவுகளைத் தேடுவது ஏன் என்று பார்த்தால். அவர்களது அரசியலை நாம் அடையாளங் காண இயலுமாயிருக்கும். மனித உழைப்பு எவ்வாறு சுரண்டப்படுகிறது. அதற்கு அடிப்படையான வர்க்க சமுதாயம். அரசு என்பவற்றை மழுப்பி மறைப்பதன் மூலம் மாக்ஸியத்தைச் சிந்தனை மட்டத்திலும் பயனற்றதாக்கும் ஒரு முயற்சி நடைபெறுகிறது.

1990க்குப் பிறகு சோவியத் யூனியனின் உடைவுடன் சோஷலிசமும் மாக்ஸியமும் காலாவதியாகி விட்டன என்று செய்யப்பட்ட மும்முரமான பிரசார அலையில் அள்ளுண்டு போன பல புத்திஜீவிகளும் முன் குறிப்பிட்ட முயற்சிக்குத் துணை போனார்கள். சிலர் மாக்ஸியமும் மற்றச் சிந்தனை முறைகள் போல உலகை அறியும் ஒரு ஆய்வு முறையே ஒழிய வேறல்ல என்று கூறித் திரிந்தனர். இன்று அவர்களிற் சிலர் தாம் சொன்னதன் தவற்றை மெய்யாக உணர்ந்து ஒப்புக் கொண்டுள்ளார்கள். வேறு சிலர் அதை உணர்ந்தும் வெளியே சொல்லத் தயங்குகின்றனர். இவர்களுடைய அடிப்படைப் பலவீனம் மாக்ஸியத்தை நடைமுறையில் பயன்படுத்துவதில் உள்ள தயக்கமே.

தொடர்ச்ச் 7ம் பக்கம்...

படிப்பகம்

www.padippakam.com



# இன்று ஈராக் நாளை சிரியா அடுத்து...?

– தென்னவன் கலை –

அமெரிக்காவில் கடும் பிரயத்தனத்துடன் குடியரசுக் கட்சியினர் ஜோர்ஜ் புஷ் தலைமையில் ஆட்சிக்கு வந்த பின்னர் "போர்! போர்!!" என்ற கத்தல்களைத் தவிர வேறெதையும் உலகம் கேட்கவில்லை. புஷ் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் போதே ஈராக் மீது போர் தொடுக்கப் போவதாக அறிவித்து விட்டுத்தான் வந்தார். செப்டம்பர் 2001 இரட்டைக் கோபுர தகர்ப்பு சம்பவம் அமெரிக்க குடிமக்களை போருக்குத் தயார்படுத்த உதவிற்று. ஆனால் அதே ஆண்டு உலக ஆதரவைத் திரட்டி ஆப்கானிஸ்தான் மீது குண்டுகளைப் போட்ட அமெரிக்காவால், ஒரு வருடம் கடந்த பின்னர் மீண்டும் அதே ஆதரவைப் பெற முடியவில்லை.

அரபு நாடுகள் ஒருமித்த குரலில் தமது எதிர்ப்பை காட்டி விட்டன. இவற்றில் பல அமெரிக்க சார்பு நாடுகளும் அடங்கும். 50 ஆண்டு காலம் எப்போதும் தோள் கொடுத்த ஐரோப்பிய நாடுகளும், பிரிட்டன் நீங்கலாக, ஒரேயடியாக மறுத்து விட்டன. பிரதான மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நடந்த கருத்துக் கணிப்பீடு 80 வீதமான மக்கள் ஈராக் மீதான போருக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இதனால் அவர்கள் கூறவிரும்புவது, இது அமெரிக்காவினதும். அதன் எதிரிகளுக்குமிடையிலான பிரச்சனை. ஊடகங்கள் கூட இதனை அமெரிக்காவின் தனிப்பட்ட இராணுவ நடவடிக்கையாக சித்தரிக்கின்றன.

ஒரு பத்திரிகை இதை பாலைவனப் புயல்–2 என வர்ணித்தது. (1991ம் ஆண்டு வளைகுடா யுத்தத்தின் தொடர்ச்சி என்ற அர்த்தத்தில்). அமெரிக்கா என்னவோ இப்போதுதான் ஈராக்கை தாக்கப் போவதாக போர் அறிக்கைகள் வெளியிட்டுக் கொண்டிருந்தாலும், போர் இப்போதும் நடந்து கொண்டு தானிருக்கின்றது. எந்தவொரு செய்தி ஊடகமும் அக்கறை எடுக்காத போதிலும் அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் நாள் தோறும் ஈராக் மீது குண்டு போட்டு வருகின்றன. இதன் காரணத்தாலும், பொருளாதாரத் தடை மிக நுணுக்கமாக கண்காணிக்கப் படுவதாலும், ஈராக் அணுவாயுதம் தயாரித்துள்ளது என்று ஜனாதிபதி புஷ் சொல்வதை பலர் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். ஈராக்கில் முன்பு ஐக்கிய நாடுகள் சபையின் பணிப்பின் பேரில் இரசாயன ஆயத புரிசோதகராக கடமையாற்றியோர் கூட இன்று அமெரிக்க அரசு பொய் சொல்வதாக கூறுகின்றனர்.

இவர்களின் கூற்றின் படி ஈராக்கில் 90 வீதமான இரசாயன, உயிரியல் ஆயுதங்கள் அழிக்கப்பட்டு விட்டன. மிகுததி 10வீதம் கடந்த போர்களில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இந்த உண்மை அமெரிக்க அரசுக்கு தெரியாமல் இருக்காது. ஏனெனில் இந்த ஆயுதங்களை ஈராக்கிற்கு விற்றவர்களே அவர்கள்தானே. 1980க்கு இடைப்பட்ட காலத்தில் (ஈரானுடன் போர் நடந்து கொண்டிருந்த போது) அமெரிக்க, பிரிட்டிஷ் ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் தமது அரசுக்களிடம் அனுமதி பெற்றுத்தான் ஈராக்குடன் வியாபாரம் செய்தன. ஆகவே ஈராக்கில் அழிக்கப்பட்ட ஆயுதங்களின் விபரங்களையும், ஆயுத நிறுவனங்களின் விற்பனை விபரங்களையும் ஒப்பிட்டு பார்த்தே உண்மையை அறியலாம். அதனால்தான் ஐ.நா.சபை, ஐரோப்பா, ரஷ்யா போன்ற அமெரிக்காவுடன் இதுவரை காலமும் உடன்பட்டவர்கள் கூட ஆதாரங்களை கொண்டு வரும்படி கேட்கின்றனர். அதிருப்தியாளர்கள் பின் விளைவுகள் எப்படியிருக்கும் என அஞ்சுகின்றனர். அவர்கள் அஞ்சுவது ஈராக் திருப்பித் தாக்கலாம் என்பதற்காகவல்ல. ஏனெனில் ஈராக்கின் ஆயுதபலம் கணிசமான அளவு குறைந்து விட்டதாக எல்லோரும் நம்புகின்றனர். ஆனால் சதாமுக்கு பின் ஈராக்கில் உள்நாட்டுப் பிரச்சனைகள் அதிகரித்து, அதனால் ஈராக் மூன்று துண்டுகளாகி, அதனால் ஈராக் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் குழப்பங்களை உண்டாக்கலாம் என்பதே அவர்களின் அச்சம்.

யார் என்ன சொன்னாலும், துணைக்கு வராவிட்டாலும் பரவாயில்லை. நவம்பர் மாதமளவில் போரை தொடங்குவது என அமெரிக்க அரசு தீரமானித்துள்ளது. இதற்கென இஸ்ரேலின் இராணுவ விமான தளங்களை பயன்படுத்த இஸ்ரேல் ஒப்புக் கொண்டுள்ளது. அமெரிக்காவின் நீண்ட நாள் அரபுக் கூட்டாளியான சவூதி அரேபியா உள்நாட்டு குழப்பங்களை கருத்தில் கொண்டு தனது நாட்டு இராணுவ தளங்களை பயன்படுத்த விடவில்லை. இதனால் மத்திய கிழக்கின் மிகப்பெரிய இராணுவ முகாம் கட்டாரில் கட்டப்பட்டு வருகின்றத. கட்டார் முகாம் அமைப்பதற்கு ஆட்சேபணை இல்லையென கூறிய போதும், அங்கிருந்து ஈராக் மீது தாக்குதல் நடத்த வேண்டாம் எனக் கேட்டுள்ளது. ஆனால் போர் தொடங்கிய பின்பு நிலைமை எப்படி மாறும் எனச் சொல்ல முடியாது. அண்மையில் கட்டார் வெளிவிவகார அமைச்சர் ஈராக்கிற்கு விஜயம் செய்திருந்த போது, கட்டாரில் இருந்து அமெரிக்கர்கள் தாக்கினால் நாம் கட்டாரை அழித்து விடுவோம் என சதாம் ஹூசைன் தெரிவித்ததாகவும் தெரிய வந்துள்ளது.

எதிர்பார்த்தபடியே ஐ.நா.சபையில் ஜோர்ஜ் புஷ் உரையாற்றிய பின்னர் சில முக்கிய நாடுகளின் ஆதரவு கிடைத்துள்ளது. பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகளான ரஷ்யா, சீனா, பிரான்ஸூடன் அமெரிக்கா சில விட்டுக்கொடுப்புகளைச் செய்து சம்மதிக்க வைக்க திரைமறைவில் முயற்சி நடக்கின்றது. சோவியத் யூனியனின் மறைவுக்குப் பின்னர் உலகம் ஒரு முனைப்பட்டதாக மாறியுள்ளமை மீண்டும் நிரூபிக்கப்படும். யூகோஸ்லேவியா, ஆப்கானிஸ்தானில் நடந்தது போன்றே ஈராக் மீதான போர் நடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நவீன ஆயுதங்களான செய்மதி மூலம் இயக்கப்படும் ஏவுகணைகள் பல்லாயிரக் கணக்கில் வீசப்படும். நாள் தோறும் மாதக் கணக்காக வானத்தில் இருந்து விழும் ஏவுகணை மழைக்கு ஏற்கனவே பலவீனப்பட்டுப் போயிருக்கும் ஈராக்கிய இராணுவம் தாக்குப் பிடிப்பது கடினம். மேலும் ஈராக்கின் 60வீதமான மக்கள் நகரங்களில் வசிக்கின்றனர். ஏவுகணைகளை நகரங்களை குறி பார்த்தே வீசப்படும் என்பதால் பெருமளவு உயிரிழப்பு ஏற்பட வாய்ப்புண்டு.



இறுதியில் அமெரிக்கா எதிர்பார்ப்பது போல ஈராக்கில் ஆட்சி மாறலாம். ஆனால் அத்தோடு பிரச்சினைகள் முடிந்து விடுமா?

இல்லை என்கின்றனர் அரபு நாடுகளின் தலைவர்கள், அமெரிக்காவின் மிக நெருக்கமான சவூதி அரேபியா, ஜோர்டான், எகிப்து ஆகிய நாடுகளின் தலைவர்கள் ஈராக் மீதான போருக்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்குமளவிற்கு உள்நாட்டு மக்களின் கொந்தளிப்பு அதிகமாகியுள்ளது. மொரோக்கோ முதல் ஓமான் வரை அமெரிக்காவை விமர்சித்தல் இன்றாட திண்ணைப் பேச்சு. இந்த நாடுகளில் எங்கே போய் யாரோடு பேசினாலும் அமெரிக்கா மீதான வெறுப்பு புலப்படும். அரசு சார்பு செய்தி ஊடகங்களில் கூட அமெரிக்க எதிர்ப்பு சாதாரணம். இந்த அமெரிக்க எதிர்ப்பு எப்படி உருவானது?

உண்மையில் சில அரபுநாடுகளின் மத்தியதர வர்க்க மக்கள், ஆசிய நாட்டவரை விட அமெரிக்க மயப்பட்டவர்கள். பத்து ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்க ஆடம்பரப் பொருட்கள் மீதான மோகம், எதிலும் அமெரிக்க நடையுடை பாவனையை பின்பற்றும் கலாச்சாரம் என்பன இவர்கள் மத்தியில் காணப்பட்டன. வளைகுடா நாடுகளின் பணக்கார ஷேக்குகள் தமது பிள்ளைகளை அமெரிக்கா அனுப்பி படிக்க வைப்பதில் பெருமை கொண்டனர். இன்று எல்லாம் தலைகீழாக மாறி விட்டது. முதலில் அரபு மக்களால் மிக உன்னிப்பாக கவனிக்கப்படும் பாலஸ்தீன பிரச்சனை இன்னும் தீர்க்கப்படவில்லை. எப்படியும் பாலஸ்தீன மக்கள் சாகும் போதெல்லாம் இன உணர்வுகள் மேலோங்கச் செய்யும். ஐ.நா.சபையின் தீர்மானங்களை உதாசீனப்படுத்தும் இஸ்ரேலுக்கு அமெரிக்காவின் தொடர்ந்த நிபந்தனையற்ற ஆதரவு அரபு மக்களை ஆத்திரமடைய வைத்துள்ளது.

குவைத் பிரச்சனை வரையில் சதாம் ஹூசைனுக்கு பிற நாட்டு அரபுக்கள் மத்தியில் ஆதரவு இருக்கவில்லை. குவைத்தை மீட்பதற்கான போரில் பல அரபு நாடுகளும் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. ஆனால் போரில் தோற்ற ஈராக்கை தண்டித்த விதம் முழு அரபு மக்களையும் கவலையுற வைத்துள்ளது. பொருளாதாரத் தடை காரணமாக போஷாக்கின்மையால் இறக்கும் ஈராக்கிய குழந்தைகள் அனுதாபத்தை அதிகரித்துள்ளது. அத்தோடு உணவின்றி வாடும் மக்களை "பாதுகாப்பு" என்ற பெயரில் அமெரிக்க, பிரிட்டிஷ் போர் விமானங்கள் நாள்தோறும் குண்டு போட்டு கொல்லும் அட்டூழியம் இன்று அமெரிக்க எதிர்ப்பாக விஸ்வரூபமெடுத்துள்ளது. பின்லாடன் போன்றவர்கள் கூட பாலஸ்தீனத்தையும், ஈராக்கையும் முதன்மைப்படுத்தி தமது போராட்டம் நியாயமானது என பிரச்சாரம் செய்வது கூட பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெறத்தான்.

அரபு மக்களின் பிரச்சனையோடு உலக முஸ்லிம்களின் சிந்தனைப் போக்கும் பின்னிப் பிணைந்துள்ளது. நீண்டகாலமாகவே பாலஸ்தீனப் பிரச்சனை பற்றிய அக்கறை உலக முஸ்லிம்களுக்கும் உண்டு. மேற்குலகால் முஸ்லிம்கள் அடக்கப்படுகின்றனர் என்ற சுய பச்சாதாபம் முன்னை விட அதிகரித்துள்ளது. ஆப்கானிஸ்தான் மீது குண்டு போட்டது முஸ்லிம் நாடென்பதால் தான் என்ற கருத்தும் பரவலாக உண்டு. அதனால் இன்னொரு (பெரும்பாண்மை) முஸ்லிம் நாடான ஈராக் மீது குண்டு போட்டால் இந்த எண்ணம் இன்னும் அதிகரிக்கும். இந்த தார்மீக கோபத்தை அவ்வப்போது மட்டும் வெளிப்படும் உணர்வு வெளிப்பாடாக நினைப்பது தவறு. உலகத் தொலைக் காட்சிகளான சி.என்.என்.னும், பி.பி.சி.யும் இப்படியான படத்தை தான் காட்டுகின்றன. ஆனால் திரை மறைவில் இஸ்லாமிய தேசியவாத அரசியல் இயக்கங்கள் பொதுமக்களின் ஆதங்கத்தை தமது ஆதரவு சக்தியாக திரட்டி வருகின்றன. தமது போராட்டம் இப்போது தான் ஆரம்பமாகியுள்ளதாக பின்லாடனின் அல்–கைதா இயக்கம் காரணமில்லாமல் அறிவிக்கவில்லை. இவர்களுக்கான ஆதரவு பெருகி வருவதாக மேற்குலக உளவு நிறுவனங்கள் கூட அறிக்கை வெளியிட்டுள்ளன.

இருப்பினும் அல்–கைதா இயக்கத்திற்கும், ஈராக்கிய அரசுக்கும் தொடர்பிருப்பதாக, அமெரிக்க அதிபர் புஷ் கூறியதை யாரும் நம்பத் தயாராகவில்லை. அதனால் இப்படியான கதைகளை புஷ் இப்போது குறைத்து விட்டார். சதாம் ஹூசைனால் தலைமை தாங்கப்படும் பாத் கட்சி தான் ஈராக்கை ஆட்சி செய்கின்றது. இவர்களின் அரசியல் சித்தாந்தமான மதச்சார்பின்மை, அரபு தேசியவாதம் என்பன இஸ்லாமிய மத வாதிகளிடமிருந்து அந்நியப்படுத்தியுள்ளது. ஈராக்கின் சிறைகளில் அடயக்கப்பட்ட அரசியல் கைதிகளில் பல இஸ்லாமிய மதத்தலைவர்களும் அடங்குவர். பாக்தாத்தில் அரசால் கட்டிக் கொடுக்கப்பட்ட மிகப் பிரமாண்டமான "சதாம் ஹூசைன் மசூதி" போன்றவற்றை சிலர் சுட்டிக் காட்டி சொல்லலாம், ஈராக் மதத்தை வளர்ப்பதாக. ஆனால் ஒவ்வொரு அரசும் தனது இருப்பிற்காக மத நிறுவனங்களையும் பயன்படுத்திக் கொள்கின்றன. ஈராக்கிய அரசும் இதற்கு விதிவிலக்கல்ல.

## மார்க்ஸிஸ

6ம் பக்க தொடர்ச்சி...

கட்சி அரசியலினின்று ஒதுங்கித் தூய மாக்ஸிய ஆய்வில் இறங்கும் எவருக்கும் நேரக்கூடிய அவலமே முற்குறிப்பிட்ட பிரச்சனை. முதலாளியம் என்பது உழைக்காத ஒரு அற்ப சிறுபான்மை உழைக்கிற ஒரு பெரும்பான்மையைச் சுரண்டுகிற ஒரு சமூக அமைப்பு என்ற அடிப்படை உண்மையை மறப்பவர்கட்கே முதலாளியச் சுரண்டலின் அடிப்படை மாறிவிட்டதாகத் தெரியும்.

மாக்ஸியவாதிகள் சமூகத்தை அதன் மாற்றங்களோடு வரலாற்றுப் போக்கிலே ஆராய்வதால் அவர்களால் அடிப்படையான விடயங்களையும் மேலோட்டமான விடயங்களையும் தெளிவாக வேறுபடுத்திக் காண முடிகிறது. எனவேதான், பின்நவீனத்துவ அதிரடிப் பிரகடனங்கள் முன்னால் அவர்கள் மிறளுவதில்லை.

உலக மயமாதலுக்கு எதிரான இயக்கம் இன்று மேற்கிலேயே மிகவும் வலுவாக உள்ளது ஏன் என்பதற்கு வர்க்கப் போராட்ட மறுப்பாளர்களிடம் விளக்கங்கள் ஏதும் இல்லை. வர்க்கப் போராட்டத்தின் தன்மை மிக எளிதாக அடையாளங் காணக் கூடிய ஒரு விடயமாக இருந்திருந்தால், அதை விளக்க ஒரு கார்ல் மாக்ஸ் தேவைப்பட்டிருக்கமாட்டார். அதன் சிக்கலான தோற்றத்தினூடு தெளிவான ஒரு சித்திரத்தைக் காணுவதிலேயே மாக்ஸியச் சிந்தனையின் மேம்பாடு தங்கியுள்ளது.

## தனியார் மயத்தின் படுதோல்வி

## பிரிட்டிஷ் ரயில்வே தரும் படிப்பினை

பிரிட்டனின் தலைநகர் லண்டனிலிருந்து மான்செஸ்டர் நகரை நோக்கி அந்த ரயில் சென்று கொண்டிருந்தது. அந்த ரயில் லண்டனிலிருந்து மிகத் தாமதமாகப் புறப்பட்டதால் பயணிகள் முகத்தைச் சுளித்தனர். ரயில் பெட்டிகளும் இருக்கைகளும் தூய்மைப்படுத்தப் படாமல் அழுக்கேறிக் கிடந்தன. கழிப்பறையோ நாறியது. அந்த ரயிலும் உரிய நேரத்திற்குள் செல்லாமல் பலமணி நேரம் தாமதமாகப் போய்ச் சேர்ந்தது.

பயணிகள் மான்செஸ்டரில் இறங்கியதும் ரயில் நிலைய மேலாளரிடம் கோபமாக முறையிட்டனர். அவரோ, "எங்களது நிறுவனம் ரயில் நிலையத்திற்கு மட்டுமே பொறுப்பு; உங்கள் புகார்களை ரயிலை இயக்கும் நிறுவனத்திடம் கூறுங்கள்" என்றார். அந்த நிறுவனமோ, "நாங்கள் ரயில் வண்டியை இயக்குவதற்கு மட்டும் தான் பொறுப்பு. சிக்னல் கிடைக்காததால் ரயில் தாமதமாகியுள்ளது. நீங்கள் சிக்னல் நிறுவனத்திடம் முறையிடுங்கள்" என்றனர். "அது ஒரு புறமிருக்கட்டும்; இருக்கைகளும் கழிப்பறைகளும் சுத்தம் செய்யப்படவில்லையே" என்று பயணிகள் கேட்டபோது, "இது எங்கள் பொறுப்பல்ல, பெட்டிகளையும் இருக்கை களையும் பராமரிப்பது வேறொரு நிறுவனம்; கழிப்பறைகளை சுத்தம் செய்வது இன்னொரு நிறுவனம்; நீங்கள் அவர்களிடம் புகார் செய்யுங்கள்" என்றனர். ஏனென்றால் பிரிட்டனில் ரயில்வே துறையானது ஏற்கனவே தனியார்மயமாக்கப்பட்டு பல நிறுவனங் களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது.

ஆறாண்டுகளாக ரயில்வே துறையை உறிஞ்சிக் கொழுத்த தனியார் பெரு முதலாளிகள், இனிமேலும் கொள்ளையடிக்க முடியாத அளவுக்கு ரயில்வேயின் அடிக்கட்டுமான துறைகள் சிதிலமடைந்த நிலையில், ரயில்வே துறையை முறையாக இயக்க அரசாங்கம் உதவி செய்ய வேண்டுமெனக் கோரினர். "நெட்வொர்க் ரயில்" என்ற தனியார் நிறுவனம் ரயில் போக்குவரத்துக்காக மட்டும் 2100 கோடி டொலர் அளவுக்கு உதவி கோரியது.

தண்டவாளப் பராமரிப்பு நிறுவனம், அடுத்த நான்காண்டுகளுக்கு தமது நிறுவனத்தின் செலவுகளை அரசே ஏற்கவேண்டும் என்றது. ரயில்வேயின் அடிக்கட்டுமானப் பணிகளை அரசாங்கம் செய்யாவிட்டால், நாங்கள் விலகிக் கொள்கிறோம் என்று எச்சரித்தன.

ஏற்கனவே நிதி நெருக்கடியால் தத்தளித்துக் கொண்டிருக்கும் டோனிபிளேயரின் அரசு, தனியார்மயத்தை ஆதரித்த போதிலும் இவற்றைச் செயல்படுத்த முடியாமல் விழிப்பிதுங்கி நின்றது. மேலும், தனியார் மயத்தின் கோரமான விளைவுகளை அனுபவித்த மக்களின் அதிருப்தி அதிகரித்துள்ள நிலையில், தனியார்மயத்தை மீண்டும் தாங்கிப் பிடித்தால் மேலும் அம்பலப்பட்டு விபரீத விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அஞ்சியது.

கடந்த ஜூன் 28–ஆம் தேதியன்று டோனிபிளேயர் அரசின் போக்குவரத்துத் துறை செயலாளர். பிரிடிஷ் ரயில்வே திவாலாகி விட்டதைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு, தனியார் மயத்தின் படுதோல்வியை வேறுவழியின்றி ஏற்றுக்கொண்டார். பிரிடிஷ் ரயில்வேதுறை மீண்டும் நாட்டுடமையாக்கப்பட்டு பொதுத்துறையாகவே இயங்கும் என்று அறிவித்தார். பிரிட்டனின் தனியார் மயமாக்கம் வெற்றிகரமாக பீடு நடை போட்டு முன்னேறி வருவதாக தனியார் மயதாசர்கள் மாய்மாலம் செய்துவந்த நிலையில், பிரிட்டிஷ் அரசின்

தொடர்ச்சி மறுபக்கம்..

www.padippakam.com



புதிய பூமி
පුදිය පූමි REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 09 நவம்பர் 2002 பக்கம் 08 விலை 10/- சுழற்சி 51

# ஜே.வி.பி.யும் சிஹல உறுமயவும் இணையுமா?

ஜே.வி.வி.பியை எந்தவொரு தமிழனும் நியாயப்படுத்தமாட்டான். இப்படி கூறுவது இனவாதமல்ல. தமிழ் மக்களின் போராட்டங்களையும், உரிமைகளையும் அங்கீகரிக்காத அமைப்புகளை தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்வதற்கு நியாயம் இருக்க முடியாது. யுத்த நிறுத்தம் சமாதான பேச்சுவார்த்தை என்பவற்றை எதிர்ப்பதால் ஜே.வி.பி.யை சிங்கள மக்களின் பெரும்பான்மையானோர் ஏற்றுக் கொள்ளவில்லை. சிங்கள மக்கள் மத்தியில் அக்கட்சிக்கு இருந்த செல்வாக்கு குறைந்து வருகிறது.

"சிஹல உறுமய" என்ற சிங்கள இனவாத கட்சியை விட மிகவும் மோசமான தமிழர் எதிர்ப்பு நிலைப்பாட்டை ஜே.வி.பி. கொண்டிருக்கிறது. அதனால் சிஹல உறுமயவும் ஜே.வி.பி. கூட்டணியாகவோ ஒரே கட்சியாகவோ இயங்குவதற்கு எவ்வித கொள்கை ரீதியான இடஞ்சல்களும் இருக்க முடியாது. அவர்கள் தமிழ்மக்கள் மீது வன்மம் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

யுத்தத்தை தொடர்ந்து நடத்த வேண்டும். சமாதான பேச்சுவார்த்தையை தொடர்ந்து நடத்தப்படக் கூடாது. தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணப்படக் கூடாது போன்ற நிலைப்பாடுகளை கொண்டிருக்கும் கட்சி சிவப்பு கொடியை உயர்த்திப் பிடிப்பதால் மட்டும் இடதுசாரி கட்சியாகி விட முடியாது.

நாட்டுப் பிரச்சினையை எதிர்ப்பவர்கள் பிளவுபடாத நாட்டிற்குள். பாதிக்கப்பட்டுள்ள தமிழ்மக்களுக்கு உரிமைகளை உத்தரவாதம் செய்யும் திட்டங்களை கொண்டிருக்க வேண்டும். வரவேற்க வேண்டும்.

ஜே.வி.பி. தனிநாட்டு கோரிக்கைக்கு அல்லது பிரிவினைக்கு எதிரென்று கூறிக் கொண்டு சிங்கள மக்களிடம் அரசியல் நடத்துவதாக காட்டிக் கொண்டது. தற்போது அவர்களின் கண்ணில்படுகின்ற எந்தவொரு தமிழரையும் ஜே.வி.பி.யினர் விட்டு வைப்பதாக இல்லை. அக்டோபர் 23ம் திகதி பாராளுமன்றத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பீ.க்களுக்கு எதிராக ஜே.வி.பி. எம்.பி.க்கள் நடந்து கொண்ட விதம் அவர்களின் முழு அளவிலான பேரினவாத வெறியை வெளிக்காட்டி யுள்ளது.

ஆனால இடதுசாரி அரசியலையும், மாக்ஸியத்தையும் தாக்குபவர்களுக்கு ஜே.வி.பி. இடதுசாரி கட்சியல்ல என்று சொல்லி தாக்குவதற்கு விருப்பமில்லை. துணிவும் இல்லை. ஜே.வி.பி. யை இடதுசாரி கட்சியென்று கூறி இடதுசாரிகளை தாக்குவதை மிகவும் நாசூக்காக செய்து வெகுஜன ஊடகங்கள் அவற்றின் இடதுசாரி எதிர்ப்பை கக்கி வருகின்றன.

பாராளுமன்ற ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு நேரம் ஒதுக்கப்படவில்லை என்று த.தே.கூட்டமைப்பு எம்.பி.க்கள் பாராளுமன்றத்திலிருந்து அக்டோபர் 23ம் திகதி வெளிநடப்புச் செய்தனர். அவ்வேளை அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட ஜே.வி.பி. எம்.பி.க்கள், த.தே.கூ. எம்.பி.க்களை விழித்து புலிகள்! புலிகள்! என கோஷமெழுப்பியுள்ளனர். அத்துடன் ஜே.வி.பி. எம்.பி.க்கள் பேசிய விடயங்களும், நடந்துகொண்ட விதங்களும் சாதாரணமான பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கு அப்பாற்பட்டவை ஆகும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் அரசியல் வங்குரோத்துத்தனம் தெரிந்ததே. அவர்கள் சிங்கள முதலாளித்துவ வாதிகளுடன் சமரசம் செய்து கொள்பவர்கள் என்பதும் வரையறுக்கப்பட்ட நிலைமையிலேயே தமிழ் மக்கள் பற்றி பேசுவார்கள் என்பதும் தெரிந்ததே.

ஆனால், பாராளுமன்றத்திற்குள் அவர்களுக்கு இருக்கும் விவாதத்தில் கலந்து கொள்ளும் உரிமையை பறிக்க ஜே.வி.பி. யார்? பேரின அகங்காரத்துடன் இருக்கும் ஜே.வி.பி.யினர் இடதுசாரிகளல்லர்.

சிங்கள மக்கள் மத்தியில் இருக்கும் உண்மையான இடதுசாரிகளையும் அவர்களின் சரியான அரசியலையும் தமிழ் தலைமைகளும், தமிழ் ஊடகங்களும் மதிக்க வேண்டும். ஜே.வி.பி.யின் அநாகரீகமான அரசியலை இடதுசாரி அரசியல் என்று கூறி இடதுசாரி எதிர்ப்பை வெளிப்படுத்தக்கூடாது.

ஜே.வி.பி. இன்னொரு சிஹல உறுமய வாகிவிட்டது. அதில் இடதுசாரி தர்மங்களுக்கு இடமில்லை.

யுத்த சூழ்நிலையில் தமிழர்களை பயமுறுத்துவதற்காக, தமிழர்களிடம் சண்டித்தனம் காட்டுவதற்காக தமிழர்களை புலிகள் என்று இனவாதிகள் கூறியவாறு ஜே.வி.பி., த.தே.கூட்டமைப்பு எம்.பீக்களை விழித்து புலி! புலி! என்று கூறுவது சண்டித்தனமா? அநாகரீகமா?

இந்நாட்டிற்கு அதிகார பரவலாக்கலை அறிமுகம் 1988இல் அறிமுகம் செய்த மாகாணசபை திட்டத்தை ஆதரித்த இடதுசாரிகளை ஜே.வி.பி. கொலை செய்தது குறிப்பிடத்தக்கதாகும். ஐக்கிய சோசலிஷ முன்னனியையும் ஏனைய இடதுசாரிகளையும் சேர்ந்த 2600இற்கு மேற்பட்ட தோழர்களை கொன்று குவித்தனர்.

ஜே.வி.பி.யி.னர் 1971ஆம் ஆண்டு கிளர்ச்சிக்காக நடத்திய 5 வகுப்புகளில் ஒன்று மலையகத் தமிழ் மக்களுக்கு எதிரானதாகும். அவ்வகுப்பில் மலையகத் தமிழ் மக்களை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் கைக்கூலிகள் என்று கூறியிருந்தனர்.

இப்படிப்பட்ட வரலாறுடையவர்கள் இடது சாரிகளாவது எப்படி?

## ஜனாதிபதி...

1ம் பக்க தொடர்ச்ச..

யுத்த நிறுத்தம் ஏற்பட்ட பிறகு வடக்கு கிழக்கில் சில ஜனநாயக விரோத நடவடிக்கைகளும், மோதல்களும் இடம்பெற்றுள்ளன என்று அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதற்கு அரச படையினரும் பொறுப்பாவர் என்பது வெளிப்படை. இந்நிலையில் முஸ்லிம் மக்களை இரட்சிக்கப் போவதாக ஜனாதிபதி கூறுவது வேடிக்கையானது. வர்க்கரீதியாக அவருடன் ஒத்துப் போகக் கூடிய காலஞ்சென்ற அமைச்சர். அஷ்ரப் தற்போதைய அமைச்சர் ரவூ் ஹக்கீம் போன்றோரை அவர் நடத்திய விதத்திலிருந்து சாதாரண முஸ்லிம் மக்கள் மீது அவர் கொண்டிருக்கும் கரிசனை எல்லோருக்கும் தெரிந்ததே. முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு, உரிமைகள் உறுதிசெய்யப்பட வேண்டும் என்பது வேறு. அவர்களை சொல்லி சமாதான முயற்சிகளை குழப்ப முயற்சிப்பது நல்லதல்ல. அவ்வப்போது எடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளின் போதெல்லாம் அவற்றை குழப்புவதற்காக பேரினவாதிகள் முஸ்லிம் மக்கள் மீது கரிசனை காட்டுவதாக பேசுவது வழமை. அதே வகை பேச்சையே ஜனாதிபதியும் பேசியுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா அவருக்கு கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தை உள்நோக்கத்துடனேயே தட்டிக் கழித்தார். தற்போது பிரதமர் ரணிலுக்கு அச்சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டுள்ளது. அவருக்கு வழிவிட்டுக் கொடுத்து சும்மா இருப்பதே ஜனாதிபதி செய்ய வேண்டிய இன்றைய அரசியல் கடமை ஆகும்.

ரணிலும் அவரது பெருமுதலாளித்துவ. ஏகாதிபத்திய சார்பு. பேரினவாத நிலைப்பாட்டிற்கு உட்பட்ட சமாதான முயற்சிகளையே எடுப்பார் என்பது விளங்கிக் கொள்ளப்பட வேண்டியதாகும். தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தத்தை தொடங்கி வைத்த பெருமை அவரது ஐ.தே.கட்சியையே சாரும் அவர் எவ்வளவு தூரத்திற்கு சமாதான முயற்சிகளுடன் முன்செல்வார் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். தற்போது அவர் எடுத்திருக்கும் முயற்சிகள் தீர்க்கமானவைகள்தான். தொடர்ந்து உறுதியான யுத்த நிறுத்தத்தை கடைப்பிடித்து அடக்கப்பட்ட தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை, சுயாட்சியை, சமத்துவத்தை உறுதி செய்யும் அரசியல் தீர்வு காண்பது, அவற்றை அடையும் வரை ஏற்படும் இடைஞ்சல்கள் தடைகளை மேவி நடவடிக்கைகளை எடுப்பது எல்லாமே அவருக்கு இலகுவான காரியங்களாக இருக்கப்போவதில்லை அவரும் ஜனாதிபதியின் இடத்திற்கு போய்ச் சேரமாட்டார் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. எனவே தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதில் வெகுவிரைவாக தனது இடத்திற்கு ரணில் வந்து சேர வேண்டுமென்ற விருப்பத்தில் ஜனாதிபதி தடைகளை ஏற்படுத்தாமல் இருப்பது நல்லது.

ஜனாதிபதி சொல்கிற அவரது சமாதான நிகழ்ச்சித் திட்டம் தமிழ் மக்களுக்கோ. முஸ்லீம் மக்களுக்கோ. மலையகத் தமிழ் மக்களுக்கோ ஏற்புடையதல்ல என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

தற்போது நடைமுறையில் இருப்பது பிரதமரின் நிகழ்ச்சித்திட்டம் அதனையும் பார்க்கலாம்.

ஆனால் அடக்கப்பட்ட தேசிய இனங்களுக்கு தீர்வை ஏற்படுத்த அவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வாக இருக்க வேண்டும். அந்த அடிப்படையிலேயே அவர்க்ளுக்கு சமாதானம் கிடைக்கும்.

ஜனாதிபதியாக இருந்தாலும் பிரதமராக இருந்தாலும் தேசிய இனங்களின் பிரச்சினையை சுயநிர்ணய உரிமை, சுயாட்சி, சமத்துவம் என்பவற்றின் அடிப்படையில்தான் தீர்க்க முடியும். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்பதை விளங்கிக் கொண்டு செயற்பட்டாலன்றி சமாதானம் என்பது மிகவும் தூரத்திலேயே இருக்கும்.

எனவே ஜனாதிபதியின் சமாதானம் என்றும், பிரதமரின் சமாதானம் என்றும் கூறுவதற்கு எதுவுமில்லை. தேசிய இனங்களின் உரிமைகளை உறுதி செய்வதன் மூலமே சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

# கூட்டமைப்பு ஆஞ்சநேயருக்கு ஒரு கூட்டுப் பிரார்த்தனை

*ஓம் ஸ்ரீ ராம், ஓம் ஸ்ரீ ராம்....*
*எங்கும் நிறைந்த கூட்டமைப்பே எல்லாம் வல்ல ஆஞ்சநேயா!*
*உன்னால் ஆகாதது ஒன்றுமில்லை அப்பா!*
*வெட்ட வெட்டத் தளைப்பவன் நீ ஆஞ்சநேயா!*
*வேடிக்கைப் பேச்சுகளால் விளைந்தவன் நீ ஆஞ்சநேயா!*
*பாராளு மன்றமே உன் இலக்கு ஆஞ்சநேயா!*
*பாவப்பட்ட மக்களின் வாக்கு உன்னது ஆஞ்சநேயா!*
*புலிகளுக்கு முதுகு காட்டியவன் நீ ஆஞ்சநேயா!*
*பேச்சு வார்த்தையே மூச்சென்றாய் ஆஞ்சநேயா!*
*பேசப் போகாமல் நின்று விட்டாய் ஆஞ்சநேயா!*
*பஞ்ச பூதங்களின் புத்திரன் நீ ஆஞ்சநேயா!*
*சஞ்சீவி மலையைப் பெயர்த்துத் தூக்கியவனே!*
*உன்னிடம் இந்தப் பிள்ளைகளை ஒப்புக் கொடுக்கிறேன் அப்பா!*
*இவர்கள் துன்பத்தைப் போக்க வல்லவன் நீ ஒருவன் தானப்பா ஆஞ்சநேயா!*
*பயந்து பயந்து பயந்து பயந்து இவர்கள் வாழ்வதைப் பாரப்பா ஆஞ்சநேயா!*

*பிரச்சினைகள் வரும்போது போசாமல் இருக்கிறார் நீ ஆஞ்சநேயா!*
*போர் நிறுத்த மீறல்களைக் காணாமல் இருக்கிறார் நீ ஆஞ்சநேயா!*
*சிறைக்குள் வாடுபவரின் துன்பங்களைப் பாரப்பா!*
*அகதி முகாமில் வாடுபவர்களை ஓடி ஓடிப்போய் பாரப்பா!*
*இந்தப் பிள்ளைகள் உன்னிடம் மன்றாடி மன்றாடி மன்றாடி மன்றாடி*
*கண்ணீர் வடிக்கிறார்கள் அப்பா!*
*தீர்மானம் எடுக்கக் கூடியவன் நீ ஆஞ்சநேயா!*
*தீர்மானமே இல்லாமல் திருகின்றாய் ஆஞ்சநேயா!*
*கூட்டத்தைக் கூட்ட யோசிக்கிறாய் ஆஞ்சநேயா!*
*கூடும் நாளைத் தள்ளிப் போடுகிறார் நீ ஆஞ்சநேயா!*
*அறிக்கை விடவும் தயங்குகிறாய் ஆஞ்சநேயா!*
*அறிக்கை விடும் வல்லமை படைத்தவன் நீ ஆஞ்சநேயா!*

*அம்மாவின் கூட்டத்திலும் பேசுகிறாய் அப்பா!*
*ஐயாவின் கூட்டத்திலும் பேசுகிறாய் அப்பா!*
*தம்பியின் கூட்டத்துக்கும் போகின்றாய் அப்பா!*
*இந்தியா லண்டன் என்று போகின்றாய் அப்பா*
*துன்பம் ஒன்று வந்தால் உன்னை இங்கு காணவில்லை ஐயா!*

*பாவப்பட்ட உன் பிள்ளைகளைப் பாரப்பா ஆஞ்சநேயா!*
*பலியெடுப்புகளை உடன் நிறுத்தச் சொல்லப்பா ஆஞ்சநேயா!*
*இந்தப் பிள்ளைகள் உன்னிடம் வருந்தி வருந்தி மன்றாடுகின்றார்கள் அப்பா!*
*இவர்கள் மனக்குறையைப் போக்கிவிடப்பா ஆஞ்சநேயா!*
*ஓம் ஸ்ரீ ராம், ஓம் ஸ்ரீ ராம்..*

பட்டினத்தடிகள்

# தமிழ் மக்களுக்கு எச்சரிக்கை

இலங்கை தமிழ் மக்களை பயன்படுத்திக் கொண்டு தென்னாசியாவில் அமெரிக்கா அதன் ஏகாதிபத்திய அக்கறைகளை நிலைநாட்ட முடியும் என்று நம்பிக்கை கொண்டு செயற்படுவதாக அமெரிக்க விவகாரங்கள் பற்றிய ஆய்வாளர் ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் பாலஸ்தீன-இஸ்ரேல் பிரச்சினையை பயன்படுத்தி இஸ்ரேலுக் கூடாகவும் தனியாகவும் அப்பிராந்தியத்தில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தி வருவது தெரிந்ததே. மத்திய ஆசியாவில் ஆதிக்கம் செலுத்த ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா ஊடுருவி இருக்கிறது. கிழக்காசியாவில் தென் கொரியாவிலும் பிலிப்பைன்ஸிலும் அமெரிக்க படைத்தளங்கள் இருக்கின்றன.

அதேபோன்று இலங்கையின் இனப் பிரச்சினையை சாதகமாகக் கொண்டு அமெரிக்க ஆதிக்கத்தை தென்னாசியாவில் நிலைநாட்ட நம்பிக்கையுடன் அமெரிக்கா முயற்சித்து வருகிறது. தென்னாசியாவில் அமெரிக்க ஏகாதிபத்திய ஆதிக்கத்தை நிலைநாட்ட இலங்கை தமிழ் மக்களை பயன்படுத்தலாம் என்று அமெரிக்கா நம்பிக்கை கொண்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த அவதானிப்பு தமிழ் மக்களை எச்சரிக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது. தமிழர்களை யூதர்களுடன் ஒப்பிட்டு பெருமைப்பட்டுக் கொள்ளும் தமிழ் பழமைவாதிகள், அமெரிக்காவிற்கு உதவும் இஸ்ரேலிய யூதர்கள் போன்று இலகுவாகவே விலைபோய்விடுவார்கள். முழு தமிழ் மக்களையும் தமிழ் மக்களின் போராட்டத்தையும் அமெரிக்க ஆதிக்க நலன்சார்ந்த அக்கறைகளை நோக்கி இழுத்துச் செல்ல முயற்சிப்பவர்கள். தமிழ் மக்கள் இது குறித்து கவனம் எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் பல தங்கு தடைகளை சந்தித்திருந்த போதும், இந்திய பிராந்திய மேலாதிக்க நலன்களுக்கான திசை திருப்பப்படவில்லை. அத்திசைக்கு போராட்டம் திருப்பப்பட எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வி கண்டன. விடுதலைப் புலிகள் இயக்க தலைமை உறுதியுடன் இந்திய மேலாதிக்க நலன்களுக்கு எதிராக போராடியது.

அவ்வகையில் அமெரிக்க ஏகாதிபத்திய நலன்களுக்கு அடிபணியாது., அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு உதவக் கூடிய வகையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் திசை திருப்பப்படமாட்டாது என்று நம்பலாம். அவ்வாறு திசை திருப்பப்படாவிடின் மத்திய கிழக்கில் அதன் ஆதிக்கத்தை நிலைநாட்ட இஸ்ரேலிய யூதர்களை அமெரிக்கா பயன்படுத்துவது போன்று தென்னாசியாவில் இலங்கைத் தமிழ் மக்களைப் பயன்படுத்துவது இலகுவாக இராது.

தென்னாசியாவில் அதற்காக சந்தைகளையும் இராணுவ ஆதிக்கத்தையும் நிலைநாட்டிக் கொள்ள அமெரிக்கா நீண்ட நாட்களாகவே முயற்சித்து வருகிறது. இலங்கையில் சாமாதானத்தை நிலைநாட்டவும் அபிவிருத்திக்கு உதவவும் முன் வந்துள்ளதாக கூறிக் கொண்டு அமெரிக்கா இலங்கையின் பல விவகாரங்களில் ஏற்கனவே தலையீடு செய்து வருகிறது. அதற்கு சாமாதான முயற்சிகளும், ஐ.தே.மு.இன் ஆட்சியும் சாதகமாக இருக்கின்றன.

இந்நிலைமையில் இப்பிராந்தியத்தில் அமெரிக்கா அதன் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள சுயநிர்ணய உரிமைப் போராட்டமோ தமிழ் மக்களோ கருவிகளாகி விடக்கூடாது. இப்பிராந்தியத்தை சிதைக்க இலங்கைத் தமிழர்கள் காரணமாகி விடக்கூடாது.

விடுதலைப் போராட்டங்களுக்கு ஏகாதிபத்தியம் உதவியதாக வரலாறே இல்லை, இருக்க முடியாது விடுதலைப் போராட்டங்களை ஏகாதிபத்தியம் நியாயப்படுத்துவது போல் பேசுவது இறுதியில் அப்போராட்டங்களை இல்லாமல் செய்வதற்கே ஆகும். அதற்கு ஏராளமான உதாரணங்கள் இருக்கின்றன. தமிழ் மக்களின் போராட்டம் அவ்வழியில் இழுத்தடிக்கப்பட்டு சிதைக்கப்படா திருக்க அவதானமும். உறுதியான நிலைப்பாடு அவசியம்.

## தனியார் மயத்தின்

7ம் பக்க தொடர்ச்சி..

இந்த முடிவானது அவர்களுக்கு மரண அடியைக் கொடுத்துள்ளது. பிரிட்டிஷ் ரயில்வே துறை மீண்டும் நாட்டுடமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து "ராயல் மெயில்" எனப்படும் பிரிட்டிஷ் அஞ்சல் துறையின் தனியார்மயமாக்கமும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

போட்டி காரணமாக தனியார் மயத்தால் சேவைகள் சிறப்பாக நடக்கும்: கட்டணம் அதிகரித்தாலும் அதற்கேற்ப தரம் உயரும்: லஞ்சமும், ஊழலும் அராஜகமும் இருக்காது; தனியார் மயத்தால் முதலாளிகள் மறுமுதலீடு செய்வது அதிகரிக்கும்: இதனால் வேலைவாய்ப்பு பெருகும்: பொருளாதார வளர்ச்சி பூத்துக் குலுங்கும் என்றெல் லாம் தனியார்மயதாசர்கள் கதையளந்தார்கள். ஆனால் அத்தனையும் பொய்: பித்தலாட்டம்; மோசடி; தனியார்மயம் என்றால் பகற்கொள்ளை. ஊழல், அராஜகம்தான் என்பதை பிரிட்டிஷ் ரயில்வே தனியார்மயத்தின் படுதோல்வி உலகுக்கு பறைசாற்றிக் காட்டிவிட்டது.

நன்றி

**புதிய ஜனநாயகம்**
அக் 2002

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட். கொழும்பு 11. அச்சுப்பதிபு யூகே. பிரின்டஸ் 98A, விவேகானந்தா மேடு. கொழும்பு 13.

படிப்பகம்